# என்னுரை

இதன் ஆசிரியர் விளம்பிநாகனார் விளம்பி என்பது இவர் பிறந்த ஊர். சங்ககாலம் போர்க்காலம், பதவி ஆசை கொண்ட அவர்கள் தமது ஆசைகளை நிறைவேற்றல் போர்புரிந்தனர். அதற்குத் தூண்டு கோலாக இருந்தார்கள் தமிழ்ப் புலவர்கள் இவற்றை வீரம் பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். இதைவிட அக ஒழுக்கமான காதலைச் சிறப்பித்துக் கூறும் நூல்கள் காதலை அளவுக்கதிகமாக வர்ணித்து சமூக சீர்கேடுகளை உண்டாக்கின.

சங்ககாலத்தில் ஓயாதபோர்களால் சமூகத்தின் நன்நிலை கெட்டது. மகாபாரதயுத்தம் நடை பெறுமுன் பரசுராமன் தரதர சகோதரரான கிருஷ்னனிடஞ் சென்று போரை எப்பாடுபட்டாவது தவிர்த்துச் சமாதானத்தை நிலைநாட்டு. போர்வருமானால் ஆயிரக் கணக்கான ஆண்கள் உயிர் துறப்பர். பலர் அங்பவீனராவர். அதனால் பெண்களின் வாழ்வு சீரழிந்துவிடும். விபச்சாரம் மேலோங்கும். சமூகத்தின் பல்வேறு விதமான குற்றச் செயல்கள் உண்டாகும். நீ போர் செய்வது தான் முடிவென்றால் நான் போரில் கலந்து கொள்ளாது தீர்த்த யாத்திரை செல்கிறேன் என்று கூறிவிட்டுச் சொன்னார்.

சங்ககாலத்தில் நடைபெற்றபோர்களால் சமூகம் சீரழிந்தது. அதனால் அச்சீரழிவிலிருந்து விடுபட ஒழுக்கம்தான் தேவை என்றுணர்த்த தமிழ்ப் புலவர்கள் ஒழுக்கத்தை வலியுறுத்திப் பலநூல்களை உருவாக்கினர். இந்தவரிசையில் திருக்குறள் , நாலாடியர், இனியவை நாற்பது , இன்னாநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை , பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, இன்நிலை நாண்மணிக்கடிகை போன்ற நூல்கள் தோற்றம் பெற்றன.

இதில் நாண்மணிக்கடிகையின் ஒவ்வொரு பாடலும் நான்கு வகையான நீதிக்கருத்துக்களைக் கூறுபவை. இதில் நூற்று ஆறு வெண்பாக்கள் உள்ளது.

# நான்மணிக்கடிகை உரை (கதை) நாவல்வடிவில்

## கடவுள் வாழ்த்து

1. **மதிமன்னு மாயவன் வாள்முகம் ஒக்கும்**
**கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்**
**முதுநீர்ப்பழனத்துத் தாமரைத் தாளின்**
**எதிர்மலர் மற்றவன் கண்ஒக்கும் பூவைப்**
**புதுமலர்ஒக்கும் நிறம்**

சந்திரனைப் போன்ற பிரகாசமான முகத்தையும், சூரியனது கதிர்களைப் போல அருளை ஒளிரும் சக்கரத்தையும், குளங்களில் மலர்ந்திருக்கும் செந்தாமரைப்பூக்களைப் போன்ற கண்களையும், காயாம்பு போன்ற நிறத்தைமுடைய திருமேனியையும் உடைய திருமாலுக்கு வணக்கம்.

2. **படியை மடியகத் திட்டான் அடியினால்**
**முக்காற் கடந்தான் முழுநிலம் - அக்காலத்து**
**ஆப்பனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்**
**அருமை யழித்த மகன்.**

இத்தகைய பெருமைகளை உடைய திருமால் , பாணாகரனது நெருப்பு மதிலை அழித்தவர். உலகைத் தனது வயிற்றில் வைத்திருப்பவர். அத்துடன் தனது திருவடியால் உலகங்கள் முழுவதையும் அளந்தவர். இந்திரன் , வருண பகவானைக் கொண்டு பெருமழை பெய்வித்தபோது பசுக்களின் குளிரைப்போக்கக் கோவர்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தவர்.

3. **எள்ளற்க என்றும் எளியரென்(று) என்பெறினும்**
**கொள்ளற்க கொள்ளார்கைம் மேற்பட –**
**உள்சுடினும்**
**சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க**

கூறல் லவற்றை விரைந்து.

கதிரேசன் அந்த ஊரின் பெரும்பிரமுகர். தனவந்தர், அவரது நெருங்கிய நண்பன் திருநாவுக்கரசு. அவ்வூர்ப் பாடசாலையின் அதிபர் தணிகாசலம், நேர்மையானவர். கடமையைச் சரிவரச் செய்பவர். பேரம்பலம், நடனபாதம் ஆகியோர் தீயவர்கள். சிவராசா ஆருரன் நல்லவர்கள்.

நடராசா பரமஏழை. ஆனால் நேர்மையானவன். எல்லோருடனும் அன்பாகப் பழகுபவன். ஊரில் உள்ள அனைவரும் நடராசாவைக் கொண்டே தமது வேலைகளைச் செய்விப்பர். பேரம்பலத்திற்கு நடராசாவைப் பிடிக்காது. அன்று அவன் கதிரேசனது கமத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது அங்குவந்த பேரம்பலம் சொன்னான்; "நீ எனக்கு வேலை செய்து தரமாட்டாய். ஏன் நான் கீழ்சாதிக்காரனோ? அடுத்தநேரச் சாப்பாட்டுக்கு வழியில்லை. எண்ணமென்றால் பெரிசு. அத்துடன் திமிரும் இந்தா போனகிழமை நீ செய்த வேலைக்கான கூலிக்காசு" என்றான்.

நடராசா நிமிர்ந்து பேரம்பலத்தைப் பார்த்து விட்டுச் சொன்னான் ; "நீங்கள் நான் செய்த வேலைக்குச் சம்பளம் தரவில்லை. அப்படியிருந்தும் நானும் எனது குடும்பத்தினரும் ஒரு வாரகாலமாக உயிர் பிழைத்திருக்கிறம். அப்படியென்றால் உணவு இருந்தது என்று தானே அர்த்தம். காசை அந்தப் பெட்டிக்குள்ளே வையுங்கள். காலையில் நான் யாரிடமும் பணம் வாங்கவில்லை"

பேரம்பலத்த்திற்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; "நீ என்ரை கையாலை காசு வாங்க மாட்டியோ?" அவ்வளவு திமிரே உனக்கு?"

"திமிரில்லை ஐயா, மிகச் சிறந்த பொருட்களைப் பெறுவதானாலும்கூட தகாதவர்களது கை தனது கைக்கு மேலிருக்கக்

கூடாது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் வறிய குடியிற் பிறந்தவர்கள், அவர்கள் தகாத செயல்களைச் செய்தாலும் சினங்கொள்ளக்கூடாதென்றும், தகாத வார்த்தைகளால் பேசக்கூடாதென்றும் ஊர்ப்பெரியவரான கதிரேசன் கூறியுள்ளார். அதன்படி தான் நான் நடக்கிறேன்'' என்றான் நடராசா.

''உன்னைப் போன்றவர்களைத் திருத்தமுன் கதிரேசனைத் திருத்துதல் வேண்டும். அவன் தான் ஊரைக் கெடுப்பது'' என்று ஆத்திரத்துடன் பேரம்பலம் பேசிக்கொண்டிருக்கும் போது நடராசா குறுக்கிட்டுச் சொன்னான்.

**4. பறைபட வாழா அசுணமா உள்ளங்**
**குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து**
**நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்**
**சொற்பட வாழாதாஞ் சால்பு**

''ஐயா, கேகயப்பறவைகள் பறையின் ஓசை கேட்டால் அதன்பின் உயிர்வாழ மாட்டா. அது போலச் சான்றோர் தமது பெருநிலை குறைவடைந்தால் உயிர் வாழ மாட்டார்கள். ஊர்ப்பெரியவரான கோவில் தலைவர் பொன்னம்பலத்தை நீங்கள் கோவிற்பணத்தைச் சூறையாடுவதாகக் கூறியவுடன் மாரடைப்பு வந்து இறந்து விட்டார். பெரியவர்களுக்கு மானம் தான் பெரிது. காட்டில் ஓங்கி வளரும் மூங்கில்கள் நெல்லுண்டான பின் பட்டுவிடும். சான்றோர்கள் ஒருபோதும் தரக்குறைவாக நடக்கமாட்டார்கள். கதிரேசன் ஒழுக்கமாக வாழும் பெரிய மனிதன். அவர் எச்சந்தர்ப்பத்திலும் நேர்மை தவற மாட்டார். அவரைத் திருத்தக் கடவுளாற் கூட முடியாது'' என்றான் நடராசா. அவனது குரல் தழுதழுத்தது.

**5. மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்து**

**ஏறிய பின்னறிய மாநலம் மாசறக்**
**சுட்டறிப பொன்னின் நலங்க ண்பார் கெட்டறிய**
**கேளிரான் ஆய பயன்.**

பேரம்பலம் எதுவும் பேசவில்லை. உணர்ச்சிப் பெருக்கால் கண்களால் வழியும் கண்ணீரைத்துடைக்காமல் உணர்ச்சி பொங்கச் சொன்னான் நடராசா; "ஐயா, மணிகளின் இயல்பைக் கழுவி அறிவார்கள். குதிரையின் நல்லியல்பைக் கடிவாளமிட்டு அதில் ஏறி அமர்ந்ததும் அறிந்து கொள்ளலாம். பொன்னின் தரத்தை அதை உருக்கி அறிவார்கள். உறவினர்கள், சுற்றத்தவர்களின் இயல்பை செல்வம் இல்லாதபோது அறிந்து கொள்ளலாம். நீங்கள் எனது உறவினன். நான் ஏழையென்பதால் தானே இப்படிக் கூறுகிறீர்கள். நான் செல்வந்தனாக இருந்தால் உங்களுக்குச் சேவகம் செய்ய வருவேனா..? வந்தமையால் தானே இவ்வளவு கேவலமாகப் பேசுகிறீர்கள். செல்வம் இல்லாமையால் வரும் துன்பங்களை நான் நன்கு அறிந்தவன்" என்று கலங்கினான் நடராசா.

**6. கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்**
**ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்**
**பல்விலையை முத்தம் பிறக்கும் அறிவார் யார்**
**நல்லாள் பிறக்குங் குடி**

பேரம்பலம் சென்றபின் கதிரேசன் நடராசாவுக்கு உணவு கொண்டு வந்தார். நடராசாவின் முகம் வீங்கிக் கறுத்திருந்தது; " பேரம்பலம் போறான். ஏதாவது சொன்னவனா…..?" என்று கேட்டார் கதிரேசன்.

நடராசாவின் கண்கள் கலங்கின. அவனால் பேசமுடியவில்லை; “நல்லவர்கள் குறையாகச் சொன்னால் தான் கவலைப்படல் வேண்டும். தீயவர்கள் நல்லவற்றை ஒருபோதும் பேசமாட்டார்கள். அதற்காகக் கவலை படக்கூடாது'' என்றார் கதிரேசன்.

“உண்மை ஐயா, ஆனால் நடராசாவினது தகப்பனும் குடும்பத்தினரும் மிகமிக நல்லவர்கள். நடராசாவினது தகப்பன் ஏகாம்பரம் உங்களைப் போன்றவர். எனக்கு அடிக்கடி உதவி செய்பவர். அப்படியான மகானுக்கு இப்படி ஒரு பிள்ளையா...?”

“நடராசா, பிறப்பைப் பற்றி யாரும் அறிய முடியாது. விஷமுள்ள கள்ளிமரத்தில் தோன்றுவது தான் அகிற்கட்டை. மான் வயிற்றில் அரிதாரம் உண்டாகும். கடலில் முத்துக்கள் பிறக்கும். அது போல எந்தக் குடியிலும் நல்லவர்களும் தீயவர்களும் தான் பிறப்பார்கள். அதனால் நல்லவரின் குடியிற் பிறந்தவன் தீய செயல்களைச் செய்கிறான் என்று வருந்துதல் ஆகாது'' என்றார் கதிரேசன்.

**7. கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி**
**சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று**
**அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்**
**பொருளிற் பிறந்து விடும்.**

“நடராசாவிடம் செல்வம் உள்ளமையால் தீய செயல்களைச் செய்தாலும் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறான். என்னிடம் செல்வம் இல்லாததால் தான் நான் துன்பப்படுகின்றேன்'' கலங்கினான் நடராசா.

“கவலைப்படாதே, முயற்சி செய்தால் செல்வத்தைச் சமாதிக்கலாம். நான் பெரும் பணக்காரனின் பிள்ளையா....? அதற்காக நான் கவலைப்பட்டதில்லை. அருள் உள்ளவன் அருட் செயல்கள் செய்ய விரும்புவான். நீ அருளுள்ளவனாக மாறு. ஒளியுள்ள மணிகள்

மலையில் தோன்றுவதால் அதைப்பெற முயல்பவன் சிரமப்பட்டு மலையின் மீது ஏறுதல் வேண்டும். நீ நல்ல மனைவியைப் பெற்றிருக்கிறாய். அவளின் இனிமையான சொற்கள் என்றும் களிப்பைத் தரும். அந்தக் களிப்பு வாழ்க்கையில் வரும் கஷ்டங்கள் அனைத்தையும் போக்கும். அதை நான் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறேன். அடுத்தவர்களின் பேச்சைச் செவிமடுக்காது உழைத்து முன்னேறு. நீ முன்னேறி விட்டால் தூற்றியவர்கள் போற்றுவார்கள்'' என்றார் கதிரேசன்.

**8. திருவொக்கும் நீதில் ஒழுக்கம் பெரிய**
**அறனொக்கும் ஆற்றின் ஒழுகல் பிறனைக்**
**கொலையொக்கும் கொண்டுகண் மாறல்**
**புலையொக்கும்**
**போற்றாதார் முன்னர்ச் செலவு.**

''உண்மை தான் ஐயா, நல்லொழுக்கம் தான் செல்வம். அது எல்லாவகையாலும் உதவி செய்யும் என்பது எனக்குத் தெரியும். அதனால் தான் நான் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகப் போற்றுகின்றேன். நீங்கள் கூறியது போல் எனது மனைவி குணவதி. அவளோடு வாழும் வாழ்க்கை துறவறத்தை விட மேம்பட்டது. பிறரைப்பற்றிப் இழிவாகப் பேசுவது அவர்களைக் கொலை செய்வதைப் போன்றது என்று நடராசாவைப் போன்ற பலர் உணர்கிறார்களில்லை. அதனால் தான் என்னை மதிக்காத நடராசாவை நானும் மதிப்பதில்லை.

காலையில் அவர் தந்த கூலிப்பணத்தைக் கூட நான் கை நீட்டி வாங்கவில்லை''. கோபப்பட்டான் நடராசா.

**9. கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்டு**
**உள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை**
**ஒண்பொருள்**
**செய்வமென் பார்க்குந் துயிலில்லை அப்பொருள்**
**காப்பார்க்கும் இல்லை துயில்.**

''கலங்குவதாலோ, கோபப்படுவதாலோ நிலைமையைச் சீர்செய்ய முடியாது. எம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டுமானால் நாம் உறங்காது முயற்சிக்க வேண்டும். திருடன் உறங்கினானானால் அவனால் திருடமுடியாது. ஒரு பெண்ணைக் காதலிப்பவனும் உறங்கமாட்டான். பொருள் தேட நினைப்பவனும் உறங்கக் கூடாது. அது போலப் பொருளைத் தேடிய பின்பும் உறங்கலாகாது. உறங்கினால் பொருள் பறிபோய்விடும். இவ்வாறு பெரியவர்கள் முயற்சயின் பலனைப் பற்றிக் கூறியிருக்கின்றனர். நான் மிகவும் ஏழையென்பது உனக்குத் தெரியும். உறங்காமல் முயற்சித்துப் பொருள் தேடினேன். தேடும் போதுள்ள நிம்மதியும் தூக்கமும் பொருள் தேடியபின் எனக்கு இல்லை'' என்று சிரித்தார் கதிரேசன். அப்போது கதிரேசனது நண்பரான திருநாவுக்கரசு அங்கு வந்தார்.

**10. கற்றார்முன் தோன்றா கழிவிரக்கங்**
**காதலித்தொன்(று)**
**உற்றார்முன் தோன்றா உறாமுதல் - தெற்றென**
**அல்ல புரிந்தார்க்(கு) அறந்தோன்றா எல்லாம்**
**வெகுண்டார்முன் தோன்றாக் கெடும்.**

“பேரம்பலம் உன்னைப்பற்றிக் கூடாமற்சொன்னான். அவன் தந்த பணத்தை நீ கை நீட்டி வாங்கவில்லையாம். அதற்காக உனக்குத் தகுந்த பாடம் கற்பிப்பானாம்” என்றார் திருநாவுக்கரசு.

“எதைப்பற்றியும் நான் கவலைப்படமாட்டன். இழந்து விட்டபொருட்களைப் பற்றிக் கற்றுணர்ந்தார்கள். கவலைப்படமாட்டார்கள். முயற்சிப்பவனும், ஊக்கமுடையவனும் சிரமத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். அறத்தைப் பற்றியும் மற்றவர்களின் மன உணர்வுகளைப் பற்றியும் தீயவர்கள் ஒருபோதும் உணரமாட்டார்கள். தேவையில்லாதவற்றிற்கெல்லாம் கோபப்படுபவர்கள் தமக்கு வரும் எல்லா நன்மைகளையும் இழப்பார்கள்.பேரம்பலம் பெரும் பணக்காரனாக இருந்தாலும் யாரும் கூலிவேலை செய்ய அவரிடம் போகமாட்டார்கள். அதற்குக் காரணம் அவர்நேர் சீராகக் கூலியைக் கொடாமையே. அதனால் அவரைப்பற்றி நான் கவலைப்படவில்லை” என்றான் நடராசா.

**11. நிலத்துக்(கு) அணியென்ப நெல்லுங் கரும்பும்**
**குளத்துக்(கு) அணியென்ப தாமரை பெண்மை**
**நலத்துக்(கு) அணியென்ப நாணம் தனிக்கணியாம்**
**தான்செல் உலகத் தறம்**

கதிரேசனும் திருநாவுக்கரசுவும் வயலைச்சுற்றிப் பார்த்தனர். வயலில் நெல்லும் கரும்பும் பயிரிடப்பட்டிருந்தன. மெல்லிய இளங்காற்றில் நெற்பயிர்கள் அழகாக அசைந்தன. கரும்பு நீண்டு வளர்ந்து சரிந்திருந்தது. அவ் வயலுக்கு நீர்ப்பாய்ச்சும் குளத்தில் செந்தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன.

“பெண்மைக்கு இயல்பாகவே நாணம் அழகு கொடுப்பது போலக் குளத்திற்குச் செந்தாமரைப்பூக்கள் அழகைக் கொடுக்கும். அதுபோலப் பச்சைப்பசேலென்ற நெற்பயிரும் முற்றி விளைந்திருக்கும் கரும்பும் வயலுக்கு அழகைக்கொடுக்கும். நீங்கள் கடைப்பிடிக்கும் அறங்கள் ஆண்மைக்கும் மறுமைக்கும் அழகாகும்” என்றார் திருநாவுக்கரசு.

“ உண்மை தான். குளத்தில் உள்ள செந்தாமரைப் பூக்களின் அழகு மனதைக் கொள்ளை கொள்கிறது. கரும்பும் நெல்லும் அழகு மட்டுமல்ல பொன்னும் கூட. எனது குடும்பத்தை வாழவைப்பதோடு, நான் அற ஒழுக்கங்களைப் பின்பற்றவும் மறுமை இன்பத்தை அனுபவிக்கவும் உதவுவது நெல்லும் கரும்பும் தான்”. என்றார் கதிரேசன்.

**12. கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர**
**மந்திரத் தாற்பிணிப்பார் மாநாகம் - கொந்தி**
**இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை**
**நயத்திற் பிணித்து விடல்.**

அன்று சிவபூரணி திருமண மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. மண்டபத்தில் உள்ளூர்ப்பிரமுகர்களும் வெளியூர்களில் வாழும் பெரியவர்களும் கூடியிருந்தனர். ஏராளமான மக்கள் அவர்களின் உரையைக்கேட்கவந்திருந்தனர். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் பேரம்பலமும் அவனது கையாட்களும் மது அருந்திவிட்டு வந்து கலகஞ் செய்தனர். கதிரேசன் அவர்களுக்குப் புத்திமதிகள் கூறினார். அவர்கள் அதைக் கேட்காது கலகஞ்செய்தனர். அதனால் பயமுறித்தினார். அதற்கும் அவர்கள் அடங்கவில்லை. அவர் திருநாவுக்கரசுவை அழைத்துச் சொன்னார், “திருநா, யானையைக் கட்டுத்தறியாலும், நல்ல பாம்பை மந்திரத்தாலும், கீழ் மக்களை இரும்பாலான விலங்காலும் தான் அடக்கலாம். அதனால் நீ காவல் நிலையத்திற்கு சென்று அறிவி. அவர்கள் வந்து விலங்கிட்டு அழைத்துச் செல்லட்டும். அவரவரின் குணத்தைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சான்றோரை இன் சொல்லால் கவரலாம். பெரியார் இராமநாதனை நான்வரச் சொன்னதாகக் கூறு’’ என்றார் கதிரேசன்.

**13. கன்றாமை வேண்டுங் கடிய பிறர் செய்த**
**நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் - என்றும்**
**விடல் வேண்டும் தங்கன் வெகுளி**
**அடல்வேண்டும்**
**ஆக்கம் சிதைக்கும் வினை**

‘‘பிறர் செய்த தீமைக்காக அவனைத் தண்டித்தால் எனக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம்? அச்சுறுத்துவதற்காகவே அப்படிச்செய்தேன். காவல்துறை அதிகாரியிடஞ் சென்று நான் கூறியதாகச் சொல்லி அவனைப் பிணை எடு’’ என்று கதிரேசன் திருநாவுக்கரசிற்குச் சொன்னார்.

‘‘அவன் தீயவனென்றாலும் எனக்குச் சில நன்மைகள் செய்துள்ளான். நான் சென்று பிணையெடுக்கிறேன். தீயவர்களானாலும் அவர்கள் செய்த நன்மைகளை மறந்தால் பழி உண்டாகும். அவன் எதற்கும் தேவையில்லாமல் கோபப்படுவான். அது நல்லவற்றையெல்லாம் அழித்து விடும் என்று சொன்னாலும் புரிந்து கொள்கிறானில்லை’’ என்று கவலைப்பட்டார் சிவராசா.

“இல்லை அவனுக்குப் பாடம் படிப்பிக்கவேண்டும். அவனது மகனை எனது சகோதரன் வேலையில் சேர்த்து விடுவதாகச் சொன்னவர். அவரிடம் சொல்லி அதைத் தடைசெய்ய வேண்டும். மகனுக்கு வேலை கிடைத்தால் பேரம்பலத்தை அடக்க முடியாது” என்றார் திருநாவுக்கரசு.

“உனக்கென்ன விசரே, ஒருவன் முன்னேறுவதைத் தடுக்கக்கூடாது. அது பெரும்பழியை உண்டு பண்ணும். அதனால் உனக்கும் கேடு வரும். பேசாமல் இரு” என்றார் கதிரேசன்.

**14. பல்லினால் நோய்செய்யும் பாம்பெலாம்**
**கொல்களிறு**
**கோட்டால் நோய் செய்யும் குறித்தாரை ஊடி**
**முகத்தான் நோய் செய்வர் மகளிர் முனிவர்**
**தவத்தால் தருகுவர் நோய்.**

“இப்படி நீங்கள் நினைத்துச் செய்படுவதால் தான் அவன் நெடுகப் பிரச்சினைப் படுகிறான். அவனைத் தண்டித்தல் வேண்டும்” என்றார் திருநாவுக்கரசு.

“தண்டனைகளால் யாரையும் திருத்தமுடியாது. தண்டனைகள் பெரும்பாலும் சம்பந்தப்பட்டவர்களைத் தூண்டி வீறு கொண்டெள வைக்கும். தண்டனைகளால் மனிதன் திருந்தினால் பின் அவன் குற்றங்களைச் செய்யமாட்டான். ஆனால் குற்றம் செய்தவன் தண்டனைபெற்ற பின்பு தானே கூடுதலான குற்றச்செயல்களில் ஈடுபடுகிறான். அதனால் உணர்ந்து திருந்தாதவர்களைத் திருத்த முடியாது. பாம்பு பல்லாலும் காளை மாடு தனது கூரிய கொம்புகளாலும் முனிவர்கள் தம் வலிமையாலும், பெண்கள் பிணங்கியும் பிறருக்குத் துன்பம் செய்வார்கள் என்று பெரியோர் கூறியுள்ளனர். நீ நாக்கலால் துன்பம் செய்கிறாய்” என்றார் கதிரேசன்.

**15. பறைநன்று பண்ணமையா யாழின் - நிறைநின்ற**
**பெண் நன்று பீடிலா மாந்தரின் - பண் அறிந்து**
**ஆர்தலின் நன்று பசித்தல் - பசைந்தாரின்**
**தீர்தலின் தீப்புகுதல் நன்று.**

பொறுமை, பொறுமை என்பீர்கள். ஒழுக்கம் தான் உயிரிலும் மேலானது என்பீர்கள். இதனால் நீங்கள் கண்டதென்ன? எல்லோரும் குறைசொல்கிறார்கள். வாழத்தெரியாதவன் என்கிறார்கள். அதைவிடத் தீய செயல்களைச் செய்வோரைச் சமூகம் மதிக்காது என்பீர்கள். நல்லதையே செய்தறியாத பேரம்பலத்தின் பிள்ளைகள் வசதியான இடத்தில் திருமணம் செய்துள்ளன. அவனை ஏசினாலும் அவனது குடும்ப வைபவங்களுக்குச் செல்லாதவர்கள் யார்.......?" கோபப்பட்டார் திருநாவுக்கரசு .

"என்னிலை தான் பிழை" என்று கூறிவிட்டு நிறுத்தியவர் பின் சொன்னார், "இப்படி நான் சொல்லக்கூடாது. ஆனால் நீ சொல்லப்பண்ணுகிறாய். நண்பர் சொல்லும் கருத்தை ஏற்காதவரை விட எதிரிகள் நல்லவர்கள்". பெரியவர்கள், "இசையோடமையாத யாழிலும் பார்க்கப் பறை நல்லதென்றும், செயல்திறன் இல்லாத சோம்பேறிகளான ஆண்களிலும் பார்க்கக் கற்புள்ள பெண்கள் மேலானவர்கள் என்றும், நல்லவர்களை விட்டுப் பிரிந்து வாழ்வதை விடத் தீக்குளித்து இறத்தல் மேலானது என்றும் கூறியுள்ளனர். உனக்கு இதைப்பலமுறை கூறியும் புரியுதில்லை" என்று கவலைப்பட்டார் கதிரேசன்.

**16. வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்**
**இன்சொற் குழியுள் இனிதெழூஉம் வன்சொல்**
**கரவெழூஉங் கண்ணில் குழியுள் இரவெழூஉம்**
**இன்மைக் குழியுள் விரைந்து.**

கதிரேசன் அப்படிக் கூறியதும் திருநாவுக்கரசு அடங்கிவிட்டார். தான் கூறியது தவறோ என்று நினைத்த கதிரேசன், திருநாவுக்கரசுவின்

அருகில் வந்து அன்புடன் சொன்னார், ‘‘நல்லவர்கள் பிறர்மீது பிரதியுபகாரம் பாரத அன்பை செலுத்துதல் வேண்டும். நல்ல மனம் படைத்த தனவந்தர்கள் தமது பொருட்களை இரப்பவர்களுக்கு மகிழ்வுடன் வழங்கவேண்டும். ஈகை செல்வத்தால் உண்டானது. அதுபோல உறவினர் நண்பர்களின் உறவு இனிமையான சொற்களைப் பேசுவதால் உண்டாகும். உள்ளத்தைப் புண்படுத்தும் வன்சொற்களும் வஞ்சகமான செயல்களும் மனதில் இரக்கமின்மையை உண்டாகும். யாசித்தல் வறுமையால் உண்டாக்கும். அதனால் செல்வமுள்ளவன் கொடுத்துதவ வேண்டும். மற்றவர்கள் இன்சொல் பேச வேண்டும். அடுத்தவர்களுக்குத் தீமை செய்யாது வாழவேண்டும். இது நல்லவர்களின் இயல்பு. யார் போற்றினாலென்ன யார் தூற்றினாலென்ன நல்லவர்கள் மனம் மாறக்கூடாது’’ என்றார் கதிரேசன்.

திருநாவுக்கரசு சிரித்தார். பின்பு சொன்னார், ‘‘ நான் அடிக்கடி சமூகத்தில் நடக்கும் தீயவற்றை நினைப்பதால் ஆத்திரப்படுவேன். நீங்கள் விளக்கமாகச் சொன்ன பின்பு தான் புரிந்து கொள்வேன்’’.

**17. இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து**
**மன்னுதல் வேண்டின் இசைநடுக – தன்னொடு**
**செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது**
**வேண்டின் வெகுளி விடல்.**

‘‘திருநா, அது எனக்குத் தெரியும். பலருக்கு மனம் உடனே பக்குவப்படாது பொங்கியெழும். அவ்வாறானவன் தான் நீ. சொன்னால் புரிந்து கொள்வாய். ஆனால் சிவன் சொன்னாலும் புரிந்து கொள்வதில்லை. செயல்களால் துன்பங்கள் வந்தாலும் திருந்துவதில்லை. ஒவ்வொருவரும் தாமே இன்பங்களையும் துன்பங்களையும் தேடிக்கொள்கிறார்கள். ஒருவன் தனக்கு இழிவு வரக்கூடாதென்றால் யாசித்தலை விடவேண்டும். அறியாமையை விலக்க விரும்பினால் புகழ்தரும் செயல்களைச் செய்தல் வேண்டும்.

உறுதுணையாக எல்லோரும் இருக்க வேண்டுமென்று விரும்பினால் அறச் செயல்கள் பலவற்றைச் செய்தல் வேண்டும். பிறரை வெல்லவேண்டுமானால் சினத்தை விட்டு விடல் வேண்டும். நீதேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் கோபப்பட்டுப்பலரைப் பகைத்துள்ளாய். அதனால் தான் நீ விவசாயச் சம்மேளனத் தேர்தலில் தோற்றாய்'' என்றார் கதிரேசன்.

**18. கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்**
**பாய்மா உடையான் உடைக்கிற்குந் - தோமில்**
**தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும்**
**அவைக்குட்டம்**
**கற்றான் கடந்து விடும்.**

''திருநா, கடலில் பிரயாணம் செய்வோர் நீராலான கடலையும், வீரர்கள் படையென்ற கடலையும், தற்காப்பு வேண்டியவன் தவம் என்ற கடலையும், தெளிவாகக் கற்றவன் அவை என்ற கடலையும் கடத்தல் வேண்டும். எதைப்பெற விரும்பினாலும் அது கடலைப்போல ஆழமாகவும் விரிந்ததாகவும் இலகுவில் கடக்கமுடியாததாகவும் தான் இருக்கும். மனத்திடமும் விடாமுயற்சியும் தான் வெற்றி என்ற கடலைக் கடக்கும் மரக்கலன்களாகும். நீ அவசரபுத்தியையும் தேவையில்லாத கோபத்தையும் விட வேண்டுமானால் பொறுமை என்ற கடலைக்கடத்தல் வேண்டும். அதைக்கடந்தாயானால் உலகில் உள்ள நன்கைள் அனைத்தையும் பெறுவாய்'' என்றார் கதிரேசன்.

**19. பொய்த்தல் இறுவாய நட்புக்கள் மெய்த்தாகட்**
**மூத்தல் இறுவாய்த்(து) இளைநலந் தூக்கில்**
**மிகுதி இறுவாய செல்வங்கள் தத்தம்**
**தகுதி இறுவாய்த்(து) உயிர்.**

“திருநா, தமக்குப் பயனள்ளபோது நட்பாய் இருப்பதும், பயனில்லாத போது நீங்கி விடுவதுமான பொருத்தமற்றவர்களின் நட்பு இருப்பதை விட இல்லாமல் இருப்பது தான் நல்லது. பொய்யான ஒழுக்கம் நட்பைக் கெடுக்கும். பேரம்பலம் தனக்குத்தேவையேற்பட்டால் எதையும் செய்வான். விழுந்தும் வணங்குவான். தேவையில்லாவிட்டால் சிறு தவறையும் பெரிதாக்குவான். அதனால் நல்லவர்கள் அவனை நண்பனாகக் கருதுவதில்லை. ஆனால் நீ அப்படியானவனல்ல. அறியாமையால் கண்டபடி கதைப்பாய். அதைவிளக்கியதும் கலங்குவாய். அப்படி இருப்பது தவறு. எல்லாம் ஓர் இயல்பின்படி தான் நடக்கும். வயது செல்லச்செல்ல இளமை மறையும். தெரியாத தொழிலைச் செய்தால் செல்வம் அழிந்துவிடும். நீ கமக்காரன். வர்த்தகத்தை விரும்பி வியாபாரஞ் செய்தாய். ஓரிரு வருடங்களில் போட்ட முதல் அழிந்து விட்டது. வாழ்நாள் முடிய உடலை விட்டு உயிர் பிரியும் என்பதை அறிந்து பிறருக்குத் தீமைகள் செய்யாது ஒழுங்காக வாழ வேண்டும்” என்றார் கதிரேசன்.

**20. மனைக்காக்கம் மாண்ட மகளிர் ஒருவன்**
**வினைக்காக்கம் செவ்விய னாதல் - சினச்**
**செவ்வேல்**
**நாட்டாக்கம் நல்லனிவ் வேந்தென்றல்**
**கேட்டாக்கம்**
**கேளிர் ஒரீஇ விடல்.**

“கதிரேசன்ணை நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். பூமியில் வாழும் நல்லவர்கள் எவ்வேளையிலும் தீயவர்கள் தான் இன்பத்தை அனுபவிக்கிறார்கள். ஊரில் நல்ல முறையில் வாழ்ந்து கல்விச்சேவை செய்யும் தணிகாசலத்தைப் பலர் குறையாகத் தானே கதைக்கிறார்கள். பேரம்பலத்தை உயர்வாகக் கதைக்கிறார்கள். பாராட்டுகிறார்கள் இது உங்களுக்குத் தெரியாதா” என்று கேட்டார். திருநாவுக்கரசு.

“மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தெரியும். பேரம்பலத்தைச் சான்றோர்களோ உயர் அதிகாரிகளோ மதிப்பதில்லை. காய்க்கும் மரம் கல்லெறிபடும் என்பார்கள். அதனால் தான் தணிகாசலத்திற்கு விமர்சனங்கள் வருகின்றன. அவருக்கு பதவி உயர்வு வந்திருக்கிறது. அவர் போன பின்பு தான் அவளின் அருமை தெரியும். நல்ல பெண்களால் மணவாழ்வு சிறக்கும். உனது மனைவியின் சிறந்தபண்புகளால் தான் உனது குடும்பம் உயர்ந்து, சிறந்தது. எதிலும் திறமையும் பயிற்சியும் உள்ளவர்கள் தான் வெற்றியையும் சிறப்பையும் அடைவர். போர்வீரனின் சிறப்புப்போரில் வெற்றியைக் கொண்டு வரும். நீதியுள்ள அரசன் நாட்டை உயர்த்துவான். இதை நீ நூல்களில் வாசித்தறிந்திருப்பாய். அத்துடன் உறவினரை மதிக்காமல் நடப்பவர்கள் கேடடைவர் என்பதற்குப் பேரம்பலம் எடுத்துக் காட்டாவான் அவனது தகப்பன் இறந்தபோது ஊரவரும் இனத்தவரும் அங்கு செல்லவில்லை. நீயும் நானும் இன்னும் சிலரும் தான் நின்று உதவி செய்தோம். இதிலிருந்து உனக்கு விளங்கவில்லையா? என்றார் கதிரேசன்.

**21. பெற்றான் அதிர்ப்பிற் பிணையன்னாள்**
**தானதிர்க்கும்**
**கற்றான் அதிர்ப்பின் பொருளதிர்க்கும் - பற்றிய**
**மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும்**
**பண்ணதிர்ப்பின்**
**பாடல் அதிர்ந்து விடும்.**

“ஊரவர், உற்றார், உறவினர், உதவிகள் செய்யாவிட்டால் கணவன் கலங்குவான். அவன் ஒழுக்கம் தவறுவதினால் தான் உதவிகள் இல்லாமல் போகின்றன. கணவன் கலங்கினால் மனைவியும் கலங்கித் துன்பப்படுவாள். கணவனுக்கு வரும் அவப்பெயர் அவளையும் பாதிக்கும். ஊரவர்களில் பலர் பேரம்பலத்தின் மனைவியை மதிப்பதில்லை. அதற்குக் காரணம் பேரம்பலத்தின் தீய செயல்கள் தான். யாராவது அவளோடு கதைத்தால் அவர்கள் தன்னைப்பற்றித்

தரக்குறைவாகச் சொல்கிறார்கள் என்றே அவன் நினைத்து அவளோடு பிரச்சினைப்படுவான். அதனால் அவளும் கதைப்பதில்லை. ஊராரும் ஏன் வீண்வம்பை விலைக்கு வாங்குவான் என்று ஒதுங்கிக் கொள்வார்கள். இது போலப் புலவனுக்கு அறிவில் கலக்கமேற்பட்டால் கருத்துக்களில் பொருள் இருக்காது. அதுபோலக் குடிமக்கள் துன்பப்பட்டால் அரசனும் துன்பப்படுவான். யாழ் நரம்புகள் பிசகினால் பாட்டுக்களும் இசையால் முரண்படும். அதனால் மற்றவர்களுடன் முரண்படாமல் வாழப்பழகுதல் வேண்டும்''. என்றார் கதிரேசன்.

**22. மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை தான்;**
**செல்லும்**
**திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இருந்த**
**அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை**
**தனக்குப்பாழ்**
**கற்றறிவு இல்லா உடம்பு.**

பேரம்பலம் நன்றாகக் குடித்துவிட்டு மனைவியைத் தாக்கியதால் அவள் தனது தாய் வீட்டுக்குச் சென்று விட்டாள். அவனது சகோதரர்கள் முரடர்கள். அதனால் பேரம்பலம் அங்கு செல்ல அஞ்சிக் கதிரேசனிடம் வந்தான். அவனது முகம் களையிழந்திருந்தது.

''இரண்டு மூன்று தினங்களாக நானும் பிள்ளைகளும் சாப்பிடவில்லை. பொருள் இருந்தும் உதவி செய்ய யாரும் இல்லாததால் கரைச்சற் படுகிறேன். நீங்கள் எனது மனைவியின் தாயாரின் வீட்டுக்குச் சென்று அவளை அழைத்து வாருங்கள். நான்போனால் வீணான பிரச்சினைகள் வரும்'' என்று அழுதான் பேரம்பலம்.

'' நல்ல மனையாளைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ கூடாது. அவள் உயர்ந்த குடியிற் பிறந்த உத்தமி. நீ குடித்து விட்டு கண்டபடி அவளைத் தாக்கினால் அவள் என்ன செய்வாள்? மனைவி இல்லாவிட்டால் இல்லறம் பாழாகிவிடும். நல்ல உறவினர்கள் நண்பர்கள்

இல்லாத ஊருக்குச் சென்றால் பல கஷ்டங்கள் உண்டாகும். அவையில் கற்றறிந்த சான்றோர் இல்லாவிட்டால் அவை பாழாப்போய்விடும். கல்வியறிவில்லாமை தான் உனது வாழ்வுக்குத் துன்பத்தைக் கொடுக்கிறது. கற்கவேண்டும், இல்லாவிட்டால் கற்றறிந்தவர்கள் சொல்வதைக்கேட்க வேண்டும். இரண்டும் செய்யாதவர்களின் வாழ்க்கை பாழாகி விடும். அதைத்தடுக்க முடியாது'' என்று கோபத்துடன் சொன்னார் கதிரேசன்.

**23. மொய் சிதைக்கும் ஒற்றுமை இன்மை;**

**ஒருவனைப்**
**பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப் -**
**பெய்த**
**கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக்**
**குலஞ்சிதைக்குங்**
**கூடார்கண் கூடி விடின்.**

''உனக்கு எதைச் சொல்லியும் பயனில்லை. எத்தனை முறை நீ உனது மனைவிக்கு அடித்திருப்பாய். அதனால் உனது மனைவியின் உறவினர்கள் உன் மீது வெறுப்படைந்துள்ளனர். நல்லவர்களோடு முரண்பட்டால் , முரண்படுபவனின் வலிமை அழிந்துவிடும். பொய்யான ஒடுக்கம் உடலை வருத்தி அழிக்கும். பொருந்தாத உணவோடு பாலைக்கலந்தால் பாலின் சுவை கெட்டுவிடும். தீயவர்களுடனான நட்பு குடும்பத்தை அழித்து விடும். அது தான் உன் வாழ்க்கையில் நடைபெறுகிறது. தீய செயல்களைச் செய்வதும் தீது. தீயாருடன் பழகுவதும் தீது. அதைக் கைவிட்டால் மகிழ்ச்சியுடன் வாழ்வாய்'' என்றார் கதிரேசன்.

**24. புகழ் செய்யும் பொய்யா விளக்கம்**

**இகந்தொருவர்ப்**
**பேணாது செய்வது பேதைமை – காணாக்**
**குருடனாச் செய்வது மம்மர் - இருள்தீர்ந்த**

**கண்ணாரச் செய்வது கற்பு.**

“கல்வி தான் ஒருவனது அறிவைப்பண்படுத்துவது, நல்ல முறையில் வாழச் செய்வது. நீ படிக்கவில்லை. அதனால் தான் நீ நல்லவற்றை உணராது அறியாமையால் தீமைகளை எந்நாளும் செய்து வருகிறாய். அறியாமை தீமைகளைச் செய்வித்துப் புகழை மழுங்கச் செய்யும். பொய்யாமை யாகிய ஒளி தான் புகழை உண்டாக்கி அதை உயர்வடையச் செய்யும் அறியாமை எவரையும் மதியாத தன்மையை உண்டாக்கித் தீய செயல்களைச் செய்விக்கும் இந்த அறியாமை கல்வியறிவின்மையால் வருவது. அதனால் தான் இளமையில் கற்கும்படி பெரியவர்கள் கூறியுள்ளனர். இனி உன்னால் கற்கமுடியாது. ஆனால் கற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கமுடியும். இனியாவது கேட்டு நடந்து திருந்து” என்றார் கதிரேசன்.

**25. மலைப்பினும் வாரணந் தாங்கும் அலைப்பினும்**
**அன்னேயென் றோடுங் குழவி சிலைப்பினும்**
**நட்டார் நடுங்கும் வினைசெய்யார் ஒட்டார்**
**உடனுறையும் காலமும் இல்.**

“பகைவர்கள் தான் ஒருபோதும் கூடி வாழமாட்டார்கள். உனது மனைவி உனது பகைவர் அல்ல. அதை நீ உணருதல் வேண்டும். பாகன் அங்குவசத்தால் குத்தினாலும் யானை அவனைச் சுமந்து செல்லும். அது போலத் தன்னை அடித்து வருத்தினாலும் குழந்தை தாயிடமே ஓடிச் சென்று ஆறுதலடையும். சினந்து பேசினாலும் நல்லவர்களும் மனைவியும் தீயவற்றைச் செய்ய மாட்டார்கள்” என்றார் கதிரேசன்.

**26. நகைநலம் நட்டார்கண் நந்துஞ் சிறந்த**
**அவைநலம் அன்பின் விளங்கும் விசைமாண்ட**
**தேர்நலம் பாகனாற் பாடெய்தும் ஊர்நலம்**

**உள்ளானால் உள்ளம் படும்.**

“எப்பொழுதும் மகிழ்வுடன் இருத்தல் வேண்டும். மற்றவர்களை மகிழ்வித்தல் வேண்டும். முகமலர்ச்சி எப்போதும் நன்மைகளைத் தான் தரும். அதுபோல அன்பு தான் யாவற்றையும் தரும். அவையிலே அன்போடு இருப்பவனே சிறப்புக்களைப் பெறுவான். தேரின் சிறப்பு பாகனால் வெளிப்படுவது போல நல்ல குடும்பத்தின் சிறப்பு குடும்பத்தலைவனால் வெளிப்படும். ஊரின் நலம் அரசனின் சிறப்பைப் பொறுத்து. நீ ஒரு நாளைக்கு அன்புடன் வாழ்ந்து பார். அப்பொழுது தான் முகமலர்ச்சியின் நன்மைகளும், அன்பின் பெறுமதியும் உனக்குப் புரியும். எப்பொழுதும் நற்செயல்கள் தான் மதிக்கப்படுபவை. மனிதர்கள் மதிக்கப்படுவதில்லை என்பதை உணர்ந்து கொள். நல்ல மனிதர்களானாலும் தீய செயல்களைச் செய்தால் அவர்கள் தூற்றப்படுவர்”. என்றார் கதிரேசன்.

**27. அஞ்சாமை அஞ்சுதி ஒன்றின் தனக்கொத்த**
**எஞ்சாமை எஞ்சல் அளவெல்லாம் - நெஞ்சறியக்**
**கோடாமை கோடி பொருள்பெறினும் நாடாதி**
**நட்டார்கண் விட்ட வினை.**

“பழிபாவங்களுக்கு அஞ்சுதல் வேண்டும். பழிபாவங்களுக்கு அஞ்சாதவர்கள் தான் துணிவுடன் தீய செயல்களைச் செய்கின்றனர்.

ஒவ்வொருவரும் தம்மால் இயன்றளவு உதவிகளை மற்றவர்களுக்குச் செய்தல் வேண்டும். உதவி செய்பவர்கள் பழிபாவங்களுக்கு அஞ்சுவர். அத்துடன் நல்லவை எவையென்றும் தீயவை எவையென்றும் செய்யும் மனங்களுக்குத் தெரியும். அதனால் உள்ளம் அறிய நடுவு நிலையில் இருந்து தவறக்கூடாது. தீய செயல்களைச் செய்தவன் மகனானாலும் உரிய தண்டனை கொடுப்பவன் தான் நீதியுள்ள மனிதன். நண்பர்களை ஆராயது நம்பாதே. நம்பியபின் சந்தேகிக்கக் கூடாது. நீ ஆராயாமல் நம்புவாய். பின் துன்பம் வந்தால் நல்லவர்களையும் சந்தேகித்துத் தீயவார்த்தைகளால் ஏசுவாய். இத்தகைய செயல்களை மாற்றாவிட்டால் நீ ஒரு போதும் இன்பத்தை அனுபவிக்க மாட்டாய்'' என்றார் கதிரேசன்.

**28. அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்**
**விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்**
**சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்**
**கொலைப்பாலுங் குற்றமே யாம்.**

''உனது பரம்பரையில் உள்ள யாரும் ஊன் உண்பதில்லை. உனது மனைவியின் குடும்பம் சைவப்பாரம் பரியம் மிக்கது. அதனால் அவள் சமயத்திற்கு முரணான எந்தச் செயலையும் செய்யமாட்டாள். நீ ஊன் உண்ணாத உயர் குடியிற் பிறந்தவனென்றபடியால் தான் உனக்கு அவளை அவளின் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். நீ குடிக்கிறாய். மாமிசம் உண்கிறாய். அதைவிட அவளைச் சமைக்கச் சொல்கிறாய். பிற உயிர்களை கொன்று தின்பதற்காக வளர்ப்பதும் குற்றம். வளர்க்காது பிறரிடம் ஊனை விலைக்கு வாங்கி உண்பதும் குற்றம். இது தெரியாதா உனக்கு? நீ விரத நாட்களிலும் மாமிசம் உண்கிறாய். அத்துடன் சைவப்பெண்ணை மாமிசம் சமைக்குமாறு வற்புறுத்துகிறாய். பேரம்பலம், சொல்லத்தகாத சொற்களைச் சொல்லுதலும் கொல்லும் குற்றம் தான். அதனால் நீ மாமிசம் சாப்பிடாதே. அவளைக் கொண்டு மாமிசம் சமைப்பிக்காதே.

தீயசொற்களால் ஏசாதே. அப்படியென்றால் தான் நான் சென்று உனது மனைவியை அழைத்து வருவேன்'' என்றார் கதிரேசன்.

**29. கோல்நோக்கி வாழுங் குடியெல்லால்**
**தாய்முலைப்**
**பால்நோக்கி வாழுங் குழவிகள் - வானத்**
**துளிநோக்கி வாழும் உலகம் உலகின்**
**விளிநோக்கி இன்புறூஉங் கூற்று**

''யமன் மற்றவர்களின் சாவை நோக்கி மகிழ்ந்திருப்பதைப்போல நீ மற்றவர்களின் துன்பத்தில் மகிழ்ந்திருக்கிறாய். குடிமக்கள் அரசனது நல்லாட்சியை நம்பி உயிர் வாழ்வர். குழந்தைகள் தாயின் முலைப்பாலை நம்பி உயிர் வாழும். உலகத்து உயிர்கள் மழையை நம்பி உயிர் வாழும். அதுபோலக் குடும்பத்தினர் தலைவனது நற்செயல்களை நம்பியே உயிர்வாழ்வர். ஆனால் நீ யமனைப் போல உயிர்களை வதைத்து இன்பம் காண்கிறாய். இத்தன்மையை நீகைவிடல் வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**30. கற்பக் கழிமடம் அஃகும் மடம் அஃகப்**
**புற்கந்தீர்ந்து இவ்வுலகின் கோளுணரும்**
**கோளுணர்ந்தால்**
**தத்துவ மான நெறிபடரும் அந்நெறி**
**இப்பால் உலகின் இசைநிறீஇ - உப்பால்**
**உயர்ந்த உலகம் புகும்.**

''நல்ல நூல்களைக் கற்றால் அறியாமை குறையும். அறியாமை குறைந்தால் புல்லறிவு நீங்கி மெய்யறிவு உண்டாகும். மெய்யறிவு வரப் பெற்றவன் உயிர்களுக்குத் தீங்கு செய்யமாட்டான். உயிர்களுக்குத் தீங்கு செய்யாதவனின் புகழ் இவ் உலகத்தில் மேலோங்கும். அதனால்

அவன் வீட்டின்பத்தைப் பெறுவான். நீ நல்லவனாக மாற வேண்டும். அதற்காக மனதைப் பக்குவப்படுத்து. சமயநூல்களைவாசி. வாசிப்பதன் மூலம் கடவுளின் இயல்புகளை அறிந்து கொள்வாய். கடவுள் இரக்கமுள்ளவர், அன்புள்ளம் கொண்டவர், உயிர்களின் உள்ளத்தில் இருப்பவர் என்று தெரிந்து கொண்டால் உன்னால் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்ய முடியாது. நீ பெரிதாகப் படிக்கவில்லையானாலும் சாதாரணமான சமய நூல்களைப் படிக்க அறிவு பெரிதாகத் தேவையில்லை. என்னிடம் இலகுவான பல நூல்கள் உள்ளன. வா தருகிறேன்'' என்றார் கதிரேசன்.

**31. குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்**
**பழித்துழி நிற்பது பாவம் - அழித்துச்**
**செறிவழி நிற்பது காமம் தனக்கொன்று**
**உறுவுழி நிற்பது அறிவு**

''நீங்கள் எதைச் சொன்னாலும் என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. நல்லவர்கள் தான் துன்பப்படுகிறார்கள். தீயவர்கள் நினைத்தவற்றையெல்லாம் செய்து இன்பமடைகின்றனர். உங்களைப் பற்றியும் தரக்குறைவாகக் கதைக்கிறார்கள் தானே''ஆத்திரப்பட்டார் திருநாவுக்கரசு.

'' திருநாவுக்கரசு, ஒவ்வொருவரது மனத்தைப் பொறுத்தது தான் வாழ்க்கை. சுபாவத்தை மாற்ற முடியாது. அதனால் தான் பல

நூல்களைக் கற்றவர்களும் வாழத் தெரியாது திண்டாடுகிறார்கள். ஒருவன் எதை நினைக்கிறானே அதுவாவான் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பள்ளமுள்ள இடத்தில் நீர் நிற்கும். பலரும் பழிக்கும் தீயோரிடம் பாவம் நிற்கும். தவ ஒழுக்கம் இல்லாதவனிடம் காமம் நிற்கும். இடர் வந்தபோது கற்ற கல்வி துணை நிற்கும் என்பார்கள். நீ கற்ற கல்வியைக் கொண்டு நாட்டில் நடப்பதை நினைத்துப்பார். நல்லவர்களைப் பற்றித் தீயவர்கள் கதைப்பார்கள். ஆனால் இடர்வந்நதபோது நல்லவர்களின் துணையைத் தான் நாடுவார்கள். பிறருக்குத் துன்பஞ் செய்யத் தீயவரை நாடுவோர் தமக்குத் துன்பம் வந்தபோதும் தீயவர்களின் உதவியை நாடலாம் தானே'' என்றார் கதிரேசன்.

**32. திருவின் திறலுடைய(து) இல்லை – ஒருவற்குக்**
**கற்றலின் வாய்த்த பிற இல்லை – எற்றுள்ளும்**
**இன்மையின் இன்னாத(து) இல்லைஇல் என்னாத**
**வன்மையின் வன்பாட்ட(து) இல்.**

''தீயோர் தீமைகள் செய்யவும், நல்லவர்கள் நன்மை செய்யவும் உதவுவது செல்வமும் கல்வியும். செல்வத்தைப் போல வலிமை உள்ளது உலகில் எதுவும் இல்லை. அது போலக் கல்வியைப் போலத் துணையாவதும் எதுவும் இல்லை. வறுமையைப் போலத் துன்பமானதும் எதுவும் இல்லை. இல்லையென்று சொல்லாமல் கொடுப்பதைப் போன்ற உறுதியான தன்மை தான் மிகச் சிறந்தது. அதைப் போன்ற சிறப்பு வேறெதிலும் இல்லை.''

''பேரம்பலம் செல்வத்தின் திமிரால் செய்யக்கூடாதவற்றையெல்லாம் செய்கிறான். அவன் கூடிய வட்டிக்குப்

பணம் கொடுத்தாலும் பணம் தேவையானோர் அவனிடஞ் சென்று தான் பணம் பெறுகின்றனர். தணிகாசலம் மிகுந்த அறிவாளி. அவர் தனது அறிவைப் பயன்படுத்திப் பெரும்பெரும் பதவிகளைப் பெறுகிறார். வறுமையைப் போலத் துன்பமானது எதுவும் இல்லை என்பதால் தான் நல்லவர்கள் இருப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கின்றனர். அதனால் தான் பேரம்பலத்தின் மனைவியை அழைத்து வரப்போகிறேன்'' என்றார் கதிரேசன்.

**33. புகைவித்தாப் பொங்கழல் தோன்றும் சிறந்த**
**நகைவித்தாத் தோன்றும் உவகை –**
**பகையொருவன்**
**முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்**
**இன்னாவித் தாகிவிடும்.**

''பேரம்பலத்தின் மனைவியின் சகோதரர்கள் தீயவர்கள். அவர்கள் உங்களை மதிக்க மாட்டார்கள். பேரம்பலம் தனக்கு இயலாவிட்டால் மற்றவர்களின் காலில் விழுந்தாவது காரியத்தைச் சாதிப்பவன். அவனது மைத்துனர்களுக்கு நல்லவர்களைத் தெரியாது. அதனால் பேசாமல் இருங்கள்'' என்றார் திருநாவுக்கரசு.

''எல்லாவற்றையும் அறிந்த பின்பு தான் செல்கிறேன். புகையின் ஏதுவாக நெருப்பு உணரப்படும். முகத்தின் உணர்வால் மன மகிழ்ச்சி உணரப்படும். குறிப்பு, சொல், செயல்களின் வாயிலாகப் பகை தெரியும். அப்பகையின் காரணமாகப் பல்வேறு வகையான துன்பங்கள் உண்டாகும். இவையெல்லாம் தெரிந்து தான் செல்கின்றேன்''.

**34. பிணியன்னர் பின்நோக்காப் பெண்டிர் உலகிற்கு**
**அணியன்னர் அன்புடை மாக்கள் - பிணிபயிரின்**
**புல்லன்னர் புல்லறிவின் ஆடவர் - கல்லன்னர்**
**வல்லென்ற நெஞ்சத் தவர்.**

‘‘கணவனின் வருமானம் பற்றித் தெரிந்து கொள்ளாத பெண்கள் நோய்க்கு ஒப்பானவர்களாவர். அதுபோல அன்புள்ளம் கொண்ட மக்கள் அணிகலன்களைப் போல அழகு தருவர். புல்லறிவுடைய ஆடவர்கள் பயிரோடு வளரும் களையைப் போன்றவர்கள். வன்நெஞ்ச முடையவர் கல்லுக்குச் சமனானவர் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். மனைவி எப்பொழுதும் கணவனின் வருவாயை அறிந்து அதற்குள் வாழ வேண்டும். இல்லாவிட்டால் அவள் கணவனுக்கு நோய்போன்றவள். கணவனின் வருவாய்க்கு மேலேதான் அதிகமான பெண்கள் செலவு செய்கின்றனர். அதனால் தான் பேரம்பலத்தின் மனைவி நல்லவள், வல்லவள், மற்றவர்களை மதிப்பவள், கனவனின் மனமறிந்து நடப்பவள். பல குடும்பங்கள் பிரிந்து வாழ்கின்றன. பேரம்பலத்தின் பிள்ளைகள் நல்லவர்கள். அறிவுள்ளவர்கள். அதனால் தான் நான் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு செல்கிறேன். பேரம்பலத்தின் மனைவியின் சகோதரர்கள் பகை காரணமாக வன்நெஞ்சுடையார்களாக மாறிவிட்டனர். கல்லைப்போன்ற அவர்களது மனதைக் கசிய வைத்தல் வேண்டும்’’ என்றார் கதிரேசன்.

**35. அந்தணரின் நல்ல பிறப்பில்லை என்செயினும்**
**தாயின் சிறந்த தமரில்லை யாதும்**
**வளமையோ டொக்கும் வனப்பில்லை எண்ணின்**
**இளமையோ டொப்பதூ உம் இல்.**

‘‘இளமைப் பருவம் கிடைத்தற்கரியது. அதோடு எதையும் ஒப்பிடமுடியாது. பேரம்பலத்தின் பிள்ளைகள் இளமைப் பருவத்தினர். அவர்கள் துன்பம் அனுபவித்தால் அவர்களது வாழ்வு சீரழிந்து விடும்.

பின் அவர்களால் சமூகத்திற்குப் பெரும்பாதிப்புக்கள் உண்டாகும். துன்பங்கள் தன் செய்தாலும் தாயைப் போன்ற மேலான உறவு உலகில் எதுவும் இல்லை. இந்த வயதில் தாயின் துணை அவர்களுக்குத் தேவை. அவர்கள் செல்வந்தர்கள். செல்வத்திற்கு ஒப்பானது உலகில் எதுவும் இல்லை. அச்செல்வத்தை அனுபவிக்கத் தாய் வேண்டும். தாயால் தான் பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும். அதனால் தான் செல்கிறேன். பேரம்பலத்தின் மனைவியின் ஊர்க்கோயிற் குருக்கள் மிகவும் நல்லவர். சாத்திரம் தெரிந்தவர், மிகுந்த அறிவாளி. அவர் எனக்கு வேண்டியவர். அவரின் சொல்லை அந்த ஊரில் உள்ள தீயவர்களும் மீற மாட்டார்கள். பிறவியில் உயர்ந்த பிறவியைப்பெற்ற அந்த அந்தணர் எனக்கு உதவுவார்'' என்றார் கதிரேசன்.

**36. இரும்பின் இரும்பிடை போழ்ப – பெருஞ்சிறப்பின்**
**நீருண்டார் நீரான்வாய் பூசுப – தேரின்**
**அரிய அரியவற்றாற் கொள்ப – பெரிய**
**பெரியரான் எய்தப் படும்.**

''இரும்பாலான கருவியால் இரும்பை வெட்டுவது போலவும், நீருணவை உண்டாலும் நீரினால் தான் வாயையும் கையையும் கழுவுவது போலவும், திடமான மனதுடன் நல்லவற்றைச் செய்தால் அரிய செயல்களைச் செய்யலாம் என்ற துணிவுடனும், பெரிய பெரிய பேறுகளைப் பெரியவர்களின் உதவியால் பெறலாம் என்ற நம்பிக்கையுடனும் செல்கிறேன். இரும்பை அறுக்க வேண்டுமானால் இரும்பால் செய்த வாளால் தான் அறுக்கலாம். அது போலத் தீயவர்களானாலும் அன்பால் அணைக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நீ பொறுத்திருந்து பார். நான் எப்படியும் பேரம்பலத்தின் மனைவியை அழைத்துக்கொண்டு தான் வருவேன்''. என்றார் கதிரேசன்.

**37. மறக்களி மன்னர்முன் தோன்றும் சிறந்த**
**அறக்களி இல்லாதார்க்(கு) ஈயுமுன் தோன்றும்**
**வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம் கயக்களி**
**ஊரில் பிளிற்றி விடும்.**

கதிரேசன் சொல்வதைக் கேட்கப் பேரம்பலத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் சொன்னான், ‘‘அண்ணை, ஒவ்வொரு மனிதரிடமும் செல்லும்போது ஒவ்வொரு விதமான உணர்வு வரும் என்று அதிபர் தணிகாசலம் சொல்வார். போர்வீரன் ஒருவன் அரசனிடஞ் செல்லும்போது அவனுக்கு வீரக்களிப்பு உண்டாகும். வறியவன் செல்வர் முன் செல்லும் போது தாம் விரும்பும் பொருள் கிடைக்கும் என்ற களிப்பு உண்டாகும். அது போல வறியவர்களுக்குக் கொடுப்பதால் செல்வர்களுக்கு நற்செயல் செய்தேன் என்ற களிப்புண்டாகும். தீயவர்களுக்குக் ஊரில் கலகம் செய்வது களிப்பை உண்டாக்கும். அதைச் செய்து நான் களிப்படைந்தேன். இப்பொழுது உங்களிடம் வரும்போது மனைவி கட்டாயம் வருவாள் என்ற எண்ணம் மனதில் தோன்றிக் களிப்பைக் கொடுக்கிறது ’’ என்று மகிழ்ந்தான் பேரம்பலம்.

**38. மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் மாலிருள்**
**நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர் - பெய்யல்**
**முழங்கத் தளிர்க்கும் குருகிலை நட்டார்**
**வழங்கத் தளிர்க்குமாம் மேல்.**

‘‘மேலோர் அடுத்தவர்களுக்கு வரும் துன்பங்களைப் போக்குவார்கள். நான் எப்போதும் தீய செயல்களைச் செய்பவன் என்று தெரிந்தும் எனக்கு அவ்வப்போது முகங்கோணாது உதவி செய்கிறீர்கள். கண்களுக்கு மையிட்டால் தான் அது ஒளிரும். கரிய இருள்வேளையில் விளக்கு எண்ணெயால் ஒளிரும். மேகம் மழை பெய்வதால் தான் மரங்கள் தளிர்த்து இருக்கின்றன. அடுத்தவர்களுக்கு உதவி செய்வது தான் மேலோரின் சிறப்பு என்று நினைத்து வந்தேன். எனது துன்பத்தைப் போக்குங்கள்’’ என்று அழுதான் பேரம்பலம்.

**39. நகை இனிது நட்டார் நடுவண் பொருளின்**
**தொகை இனிது தொட்டு வழங்கின் -**
**வகையுடைப்**
**பெண் இனிது பேணி வழிபடின் பண் இனிது**
**பாடல் உணர்வார் அகத்து.**

‘‘அண்ணை,நண்பர்களோடு முகமலர்ச்சியுடன் பழகுவது இன்பமானது. ஆனால் நீங்கள் தீயவர்களுடனும் எதிரிகளுடனும் முகமலர்ச்சியுடன் பழகுகிறீர்கள். நான் பொருள் இருந்தும் வறியவர்களுக்கு ஈயாது சுய நலத்திற்காகத் தீயவர்களுக்குப் பிரதியுபகாரம் கருதியே உதவி செய்வேன். ஆனால் நீங்கள் வறியவர்களுக்குப் பொருள் வழங்குவது தான் பொருளுக்கு இன்பம் எனக் கருதி பிரதியுபகாரம் கருதாது உதவுகிறீர்கள். கணவனைப் போற்றி அவனது மனதை அறிந்து நடக்கும் மனைவி தான் கணவனுக்கு இனியவள் என்று புரிந்து நடந்த எனது மனைவியின் நற்குணங்களை நான்புரிந்து கொள்ளாமையால் தான் இப்படி நடந்தது. பாட்டை உணர வல்லவர்களுக்குத் தான் பண் இனிமை தரும் என்பார்கள். அது போல மனைவியின் குணத்தை அறிந்து நடப்பது தான் கணவனுக்கு இனிமை என்பதை நான் உணரவில்லை’’. கலங்கினான் பேரம்பலம்.

**40. கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்எஞ் ஞான்றும்**

**இரப்பவர்க்குச் செல்சார் ஒன் றீவார் -**

**பரப்பமைந்த**

**தானைக்குச் செல்சார் தறுகண்மை ஊனுண்டல்**

**செய்யாமை செல்சார் உயிர்க்கு.**

''உயிர்களுக்குச் சிறப்பு ஊன் உண்ணாமை'' என்று எனது மனைவி அடிக்கடி சொல்வாள் . ''ஊன் உண்பது பாவம். ஊன் உண்பது கொலைத் தொழிலை ஆதரிப்பது என்று தினமும் கலங்குவாள். நான் அதைப் பொருட்படுத்துவதேயில்லை. ஊன் உண்ணாத அவளிடம் ஊனைக்கொடுத்துச் சமைக்கும் படி கூறுவேன். இனிமேல் நான் அப்படிச் செய்ய மாட்டேன். பொருள் இருந்தும் பொருள் கொடாதவர்கள் இரப்பவர்களைக் கண்டால் தெரியாதது போலத் தலையைக் கவிழ்த்து நிற்பார் எனப் பெரியவர்கள் சொல்வார்கள். நான் அப்படித்தான் நிற்பேன். இனிமேல் நான் அப்படி நிற்கமாட்டேன். படைக்கு வீரம் பற்றுக்கோடு போல் இரப்பவர்களுக்குப் பொருள் உள்ளோரே பற்றுக்கோடு என்பதை உணரத் தவறிவிட்டேன்'' என்று அழுதான் பேரம்பலம்.

**41. கண்டதே செய்பவாங் கம்மியர் உண்டெனக்**
**கேட்டதே செய்ப புலனாள்வார் - வேட்ட**
**இனியவே செய்ப அமைந்தார் - முனியாதார்**
**முன்னிய செய்யுந் திரு.**

“அண்ணை, எனது தகப்பனார் சொல்வார், “திருமகள் சான்றோர்கள் விரும்பியவற்றைத் தான் செய்வாள். அதனால் சான்றோனாய் வாழ்” என்று. ஆனால் நான் கம்மாளர் தாம் கண்ட பொருட்களையே செய்வது போலவும் அறிஞர்கள் பயனுள்ளவற்றைச் செய்வது போலவும், நான் தீயவர்களுடன் கூடி அவர்கள் சொன்னதையும் செய்பவற்றையும் செய்து கீழ் நிலை அடைந்து விட்டேன். இப்போது தான் எனது தந்தை சொன்னவை புரிகிறது” கலங்கினாள் பேரம்பலம்.

**42. திருவும் திணைவகையான் நில்லாப் -**
**பெருவலிக்**
**கூற்றமும் கூறுவ செய்துண்ணா(து) – ஆற்ற**
**மறைக்க மறையாதாம் காமம் - முறையும்**
**இறைவகையான் நின்று விடும்.**

“செல்வம், குடியின் இயல்புக்கேற்பத் தான் தங்கும். வலிமை மிக்க யமன், தான் கவர்ந்து செல்பவனின் விருப்பத்திற்கேற்ப நடக்க மாட்டான். எப்படித்தான் மறைந்தாலும் காமத்தை மறைக்க முடியாது. அதுபோல நானும் எனது விருப்பிற்கேற்றபடி தான் நடக்கும். அது போல நானும் எனது விருப்பிற்கேற்ப நடந்தமையால் தான் இந்த நிலையை அடைந்தேன். இப்போ எனது தீய நடத்தைகளால் செல்வம் குறைந்து கொண்டு போகிறது. யமனைப் போல நானும் எனது குடும்பத்தனரின் சொல்லைக்கேட்காமல் விட்டு விட்டேன். காமத்தைப்போல மறைத்தாலும்

தீய குணங்கள் மனதில் கிளர்ந்து விடுகின்றன''. என்று கலங்கின்ன் பேரம்பலம்.

**43. பிறக்குங்கால் பேரெனவும் பேரா இறக்குங்கால்**
**நில்லெனவும் நில்லா உயிரெனைத்தும் - நல்லாள்**
**உடம்படின் தானே பெருகுங் - கெடும்பொழுதில்**
**கண்டனவும் காணாக் கெடும்.**

''உயிர்கள் பிறக்கும் போது வினைகள் நீங்கமாட்டாது. இறக்கும் போது உயிரை நில்லென்று சொன்னால் அது நில்லாது. திருமகள் கூடியிருந்தால் தான் செல்வம் நிலைக்கும். திருமகள் நீங்கினால் செல்வம் சென்று விடும். இதை உலகத்தவர்கள் உணர்கிறார்கள் இல்லை. வீட்டிற்குத் திருமகள் மனைவி. மனைவி நற்குணமுடையவளாக வாழவேண்டும். அதற்குக் கணவன் உறு துணையாக இருத்தல்வேண்டும். நற்குணமுள்ள உனது மனைவி வீட்டைவிட்டுச் சென்றதும் செல்வமான திருமகளும் சென்று விட்டாள். அதனால் தான் உனது வர்த்தகநிலையம் தீயினால் அழிந்தது'' என்றார் கதிரேசன்.

**44. போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த**
**வேரின்றி வாடும் மரமெல்லாம் - நீர்பாய்**
**மடையின்றி நீள்நெய்தல் வாடும் படையின்றி**
**மன்னர்சீர் வாடி விடும்.**

''உண்மைதான். போரில்லாவிட்டால் வீரர்களின் சிறப்புக்கெட்டுவிடும். வேர்கள் அறுந்தால் மரங்கள் பட்டுவிடும். நீரற்று விட்டால் நெய்தல் மலர்கள் காய்ந்து சருகாகி விடும். படையில்லாவிட்டால் அரசரது செல்வம் அழிந்து விடும். அதுபோல மனையாள் இல்லாவிட்டால் வீடு அழிந்துவிடும். எனது மனைவி தாய்வீட்டுக்குச் சென்று சில நாட்கள் தங்கியதால் எனது குடும்பம்

மட்டுமல்ல மனமும் அழிந்து விட்டது'' என்று பெருமூச்சு விட்டான் பேரின்பநாதன்.

**45. ஏதிலார் என்பார் இயல்பில்லார் யார்யார்க்கும்**
**காதலார் என்பார் தகவுடையார் - மேதக்க**
**தந்தை யெனப்படுவான் தன்னுவாத்தி**
**தாயென்பாள்**
**முந்துதான் செய்த வினை.**

“திருநா, ஒருவனுக்கு இரத்த உறவினரென்றாலும் நல்லியல்புகள் இல்லாவிட்டால் அவர்கள் அயலார் தான். அது போல நல்லியல்புகள் உள்ள அனைவரும் அன்பர்கள். மேலான தந்தை என்று சொல்லப்படுபவன் ஆசிரியன். எமது பாடசாலை அதிபர் தணிகாசலம் உண்மையில் சகல மாணவர்களுக்கும் தந்தை தான். ஒவ்வொரு மாணவரின் விபரமும் அவருக்குத் தெரியும். அதனால் வசதி குறைந்த மாணவர்களின் கல்வியில் பெரும் அக்கறை எடுக்கிறார். அதனால் ஏழைப்பிள்ளைகள் ஆர்வத்துடன் கற்கின்றனர். நடராசாவின் பிள்ளைகள் நன்றாகப் படிக்கிறார்கள். திருச்செல்வம் நோய் காரணமாகத் தனது மூத்த மகனைப் பாடசாலையால் நிறுத்தி வேலைக்கு அனுப்பினான். அதை அறிந்த அவர் அவனுக்கு உதவி செய்வதோடு மகனையும் கற்பிக்கிறார்.அத்துடன் அறிவை வளர்ப்பவன் ஆசிரியன் அதனால் எல்லா ஆசிரியர்களையும் மேற்படிப்பு படிக்கச் சொல்லி வற்புறுத்துகிறார். ஒவ்வொருவருக்கும் செய்த நல் வினைப் பயனைப் பொறுத்தே தாய் அமைவாள் பேரம்பலத்தின் மனைவி நல் தாய். அதனால் தான் செல்ல எண்ணுகிறேன்'' என்றார் கதிரேசன்.

**46. பொறிகெடும் நாணற்ற போழ்தே – நெறிபட்ட**
**ஐவரால் தானே வினைகெடும் - பொய்யா**
**நலம்கெடும் நீரற்ற பைங்கூழ் - நலமாறின்**

**நண்பினார் நண்பு கெடும்.**

அப்பொழுது அங்கே நடராசா வந்து சொன்னான், "கதிரேசண்ணை நீங்கள் மிகவும் நல்லவர். எல்லோருக்கும் உதவி செய்பவர். எல்லோரையும் மதிப்பவர். இருந்தும் உங்களைப்பல முறை பேரம்பலம் ஏமாற்றியுள்ளான். உதவி செய்ய விரும்பினால் பேரம்பலத்தின் பிள்ளைகளை அழைத்துச் சென்று தாயிடம் விடுங்கள். இவன் நாணம் இல்லாதவன். நாணம் நீங்கினால் செல்வம் அழிந்து விடும். பேர் புகழ் அழியும் அத்துடன் ஐம்பொறிகளின் வசப்பட்டு அவை ஏவியவற்றைச் செய்தால் வாழ்வு அழியும். நீரில்லாவிட்டால் பயிர்கள் எரிந்து நாசமாகி விளைச்சலைக் குறைக்கும். மனம் நல்லவற்றைச் சிந்திக்கா விட்டால் நட்புக் கெடும். இவை யாவும் பேரம்பலத்திற்குப் பொருந்தும். தீயவற்றைச் செய்து விட்டு நல்லவனாக நடிக்கிறான்" என்றான் நடராசா.

**47. நன்றிசாம் நன்றறியா தார்முன்னர்ச் - சென்ற**
**விருந்தும் விருப்பிலார் முன்சாம் -**
**அரும்புணர்ப்பின்**
**பாடல்காம் பண்ணறியா தார்முன்னர் ஊடல்சாம்**
**ஊடல் உணரார் அகத்து.**

"நன்றி உணர்வில்லாதவனுக்குச் செய்யும் உதவியால் அவனும் பயன்படான். அதனால் செய்ந்நன்றி கெடும். அன்பில்லாதவர் களின் குடும்பத்திற்குச் செல்லும் விருந்தினர்களும் துன்பமடைவர். இசையை அறியாதவர்களின் முன் இசையுடன் பாடினால் அப்பாடல் கெட்டுவிடும். பாடுதல் மிகவும் இனிமையானது என்று அறியாத கணவனோடு பாடிய மனைவி துன்பத்தை அனுபவிப்பாள். அதுபோல எதுவும் அறிந்தும் அறியாதவனைப்போலச் செயற்படும் இவனுக்கு உதவினால் உங்களுக்குத் தான் கேடு வரும்" என்றான் நடராசா.

**48. நாற்ற முரைக்கும் மலருண்மை கூறிய**
**மாற்ற முரைக்கும் வினைகலந்தூக்கின்**
**அகம்பொதிந்த தீமை மனம் உரைக்கும்**
**முன்னம்**
**முகம்போல முன்னுரைப்ப தில்.**

"மலரின் இருப்பை அதன் மணம் அறிவிக்கும். ஒருவனது செயல்திறனையும் குணத்தையும் அவனது சொற்கள் அறிவிக்கும். நீதியில்லாதவற்றைச் சொல்லக்கூடாதென்று நல்லொருவரது நெஞ்சே அறிவிக்கும். அத்துடன் ஒருவனது உள்ளக் குறிப்பை அவனது முகம் வெளிப்படுத்தும். இவனது முகத்தைப் பாருங்கள், நெஞ்சில் உள்ளவை அத்தனையும் தீயவை என்று சொல்கிறது. இவனுக்கு மனச்சாட்சி இல்லை. இருந்திருந்தால் அது உங்களுக்கு இவன் செய்த தீமைகளைச் சொல்லி உங்களிடம் போகவேண்டாம் என்று சொல்லியிருக்கும். இல்லாவிட்டால் இனியாவவது திருந்தி நட என்று சொல்லியிருக்கும். இவன் மனச் சாட்சியில்லாதவன்" ஆத்திரப்பட்டான் நடராசா.

**49. மழையின்றி மாநிலத்தார்க்(கு) இல்லை மழையும்**
**தவமில்லார் இல்வழி இல்லை தவமும்**
**அரசன் இலாவழி இல்லை அரசனும்**
**இல்வாழ்வார் இல்வழி இல.**

" ஆத்திரப்படாதை நடராசா. மழை பெய்யாவிட்டால் உலக மக்களுக்கு வாழ்வு இல்லை. அப்படியான மழை உலகில் வாழ்கின்ற

நல்லவர்களுக்காகத் தான் பெய்வதாகப் பெரியவர்கள் கூறுகின்றனர். ஊரில் நாலு நல்லவர்கள் இல்லா விட்டால் மழையும் பெய்யாது. முனிவர்கள் நல்ல அரசன் நாட்டை ஆளாவிட்டால் தவம் செய்ய மாட்டார்கள். அதுபோலக் குடிமக்கள் இல்லாவிட்டால் அரசனும் தேவையில்லை. ஊரில் நடப்பவையெல்லாம் நல்லவையாக இருக்காது. நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. ஊரவரில் பலர் தீமை செய்கிறார்கள் என்பதற்காக மழை பெய்யாமல் விடுவதில்லை. ஏனென்றால் அதனால் நல்லவர்கள் பாதிபுக்குள்ளாவர். அதனால் நல்லவர்கள் எப்போதும் பிறருக்கு உதவி செய்தல்வேண்டும். உதவி செய்யும் போது நன்மை தீமை பார்க்கக் கூடாது. நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லையும் வளர்க்கிறது''. என்றார் கதிரேசன்.

**50. போதினான் நந்தும் புனைதண்தார் மற்றதன்**
**தாதினான் நந்தும் சுரும்பெல்லாம் - தீதில்**
**வினையினான் நந்துவர் மக்களும் தத்தம்**
**நனையினான் நந்தும் நறா.**

மீண்டும் எதையோ சொல்ல வாயுன்னினான் நடராசா, ''நடராசா உலகில் ஒன்றை நம்பித்தான் இன்னொன்று வாழ்கிறது. அத்துடன் ஒன்றால் இன்னொன்று பெருமை பெறும். பூக்களால் மாலை பெருமை பெறும். வண்டுகள் அப்பூக்களில் உள்ள தேனை நம்பி வாழ்கின்றன.

உலக மக்கள் நற்செயல்கள் மூலம் பெருமை பெறுபவர். தேன்கூட அது இருக்கும் பூவரும்பினால் பெருமைபெறும். அதுபோல நன்றி உணர்வில்லாதவர்களுக்குச் செய்யும் சேவையால் தான் நல்லவர்கள் பெருமையடைவார்கள். உதவி செய்து வாழாவிட்டால் உலகில் யாரும் மகிழ்ச்சியாக வாழ முடியாது. பேரம்பலத்திற்கு இல்லாவிட்டாலும் அவரது தந்தைக்காகவும் பிள்ளைகளுக்காகவும் உதவி செய்தல் வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**51. சிறந்தார்க்(கு) அரிய செறுதல்எஞ் ஞான்றும்**
**பிறந்தார்(கு) அரிய துணைதுறந்து வாழ்தல்**
**வரைந்தார்க்(கு) அரிய வகுத்தூண் இரந்தார்க்**
**கொன்(று)**
**இல்லென்றல் யார்க்கும் அரிது.**

''நற்பண்புகளை உடைய சிறந்தவர்கள், ஒருவரை ஒருவர் சினந்து கொள்ள மாட்டார்கள். உயர் குடிப்பிறந்தவர்கள் தம் இனத்தவரை நீங்கி வாழ மாட்டார்கள். தனக்கென வாழ்பவர் பகுத்து உண்ணமாட்டார். அருளுள்ளவரககள் இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லமாட்டார்கள். அதனால் என்னால் பேரம்பலத்திற்கு உதவி செய்யாமல் இருக்க முடியவில்லை. உதவி செய்யாவிட்டால் அருளும் அன்பும் உயர்குடிப்பிறப்பும் என்னை விட்டு நீங்கிச் சென்று விடும்'' என்றார் கதிரேசன். அவரது குரல் தளதளத்தது.

**52. இரைசுடும் இன்புறா யாக்கையும் பட்டால்**
**உரைசுடும் ஒண்மை யிலாரை – வரைகொள்ளா**
**முன்னை ஒருவன் வினைசுடும் வேந்தனையும்**
**தன்னடைந்த சேனை சுடும்.**

''ஒவ்வொருவரும் தாம் தாமே தமக்குத் துன்பத்தைத் தேடிக் கொள்கிறார்கள் என்றுபெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நோய்

உள்ளவன் உண்ணும் உணவு சமிபாடடையாது அவனைத் துன்புறுத்தும். அதனால் நோயுள்ளவன் நோயின் தன்மையை அறிந்து உண்ணுதல் வேண்டும்.அறிவில்லாத தீயவர்களை அவர்களின் வாய்ச்சொல்லே தண்டிக்கும். முன்செய்த தீவினைகள் பிற் காலத்தில் வருந்தும் . நீதியில்லாத அரசனைச் சேனைகளே கொல்லும். அதனால் தீமை செய்பவர்களை அத்தீமைகளே தண்டிக்கும் அதனால் நாம் தண்டிக்காது உதவிகள் செய்தல் வேண்டும் என்றார் கதிரேசன்.

**53. எள்ளற் பொருள(து) இகழ்தல் ஒருவனை**
**உள்ளற் பொருள(து) உறுதிச்சொல் -**
**உள்ளறிந்து**
**சேர்தற் பொருள(து) அறநெறி பன்னூலுந்**
**தேர்தற் பொருள பொருள்.**

“பேரம்பலத்தைக் கெடுப்பது சிவலிங்கம். அவன் குடிப்பதற்காக ஒவ்வொருவரைப்பற்றியும் கூடாமற் சொல்வான். அவர்கள் பேரம்பலத்தைப் பற்றிக் குறையாகக் கதைப்பதாகக் கூறுவான். இனத்தவர்களையும் ஊரவர்களையும் பிரிப்பது சிவலிங்கம் தான். கேவலமான அவனைப் பேரம்பலம் நம்புவானே தவிர மற்றவர்களை நம்பமாட்டான்” என்று நடராசா கூறும்போது கதிரேசன் இடை மறித்துச் சொன்னார், “ஒருவன் மற்றவர்களை இழக்கக்கூடாது. சொல்லுவார் சொன்னால் கேட்போரின் மதி எங்கே போனது? ஒருவன் ஏற்றுக் கொள்ளவேண்டியது. பெரியோர்களின் அறிவுரைகளை கடைப்பிடிக்க வேண்டியது உண்மையானஅறவழியைக் கூறும் நூல்களின் மெய்ப்பொருளை. நீ கற்றவன். இவையாவும் உனக்குத் தெரியும். தெரிந்த பின்பும் பேசுகிறாயே . ஒருவனுக்கு ஒரு முறை தான் அறிவுரைகளைக் கூறலாம். அறிவுரைகள் மனதில் எப்பொழுதும் அழியாது இருத்தல் வேண்டும். ஏழைகளுக்கு உணவை எப்பொழுதும் கொடுத்தல் வேண்டும். ஏனென்றால் உண்ட சில மணிநேரத்தில் உணவு சமித்து விடும். ஆனால் மனதில் உள்ளவை ஒருபோதும் சமிப்பதில்லை.

அதனால் அவற்றைத் திரும்பத்திரும்பக் கூற வேண்டியதில்லை'' என்றார் கதிரேசன்.

**54. யாறுள் அடங்கும் குளமுள வீறுசால்**
**மன்னர் விழையும் குடியுள – தொன்மரபின்**
**வேதம் உறுவன பாட்டுள வேளாண்மை**
**வேள்வியோ(டு) ஒப்ப உள.**

அதன்பின் நடராசா எதுவுஞ் சொல்லவில்லை, ''பேரம்பலம், ஆறுகளைத் தம்முள் அடக்கி வைக்கக் குளங்கள் உள்ளன. அரசர்களால் விரும்பப்படும் குடிகள் உள்ளன. வேதக் கருத்துக்களை உள்ளடக்கிய பாடல்கள் உள்ளன. அதுபோல வேள்விக்கு நிகரான ஈகைகளும் உள்ளன. அதுபோலக் குடும்பத் தலைவனுக்கு அடங்கக்கூடிய குடும்பங்களும் உள்ளன. ஆற்று நீர் கொள்ளக் கூடியளவு விஷ்தீரணம் உடையதாகக் குளங்கள் இருத்தல் வேண்டும். அரசரின் விருப்புக்கேற்றபடி குடிகள் நடந்தால் தான் அரசர் குடிகளை விரும்புவார். வேதக் கருத்துக்களை உடைய பாடல்களைத் தான் மக்கள் விரும்புவர். எல்லோராலும் வேள்விகளைச் செய்யமுடியாது. ஆனால் வேள்வியின் பயனைத் தரக்கூடிய ஈகையும் உள்ளது. உயிர்களைக் கொன்று தின்னாமை, பசித்தவனுக்கு உணவளித்தல், கல்வியறிவில்லாதவனுக்கு கல்வி கற்பித்தல் என்பன வேள்வியின் பயனைத் தருவன. அதுபோலக் குடும்பத்தலைவன் குடும்பத்தினரின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டால் என்றும் இன்பமாக வாழலாம். அதனால் இனியாவது மனைவியின் உணர்வுகளைப் புரிந்து வாழ்'' என்றார் கதிரேசன்.

**55. எருதுடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்**
**ஒருதொடையான் வெல்வது கோழி – உருவோடு**
**அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்ணெனப்ப**
**சேனைச்**

**செறிவுடையான் சேனா பதி.**

“பேரம்பலம், நீ ஒரு விவசாயி. விவசாயி எருதுகளை வைத்திருத்தல் வேண்டும். உழவு மாடுகள் வளர்க்காதவன் வேளாளன் அல்ல. நீ கூலிக்கு வயலை உழுவிக்கிறாய். அதை விட்டு விட்டு எருதுகளை வாங்கு. அந்தந்தப் பண்புகள் இல்லாவிட்டால் குடிக்குரிய பண்புகள் அழிந்து விடும். உழவு மாடுகள் உள்ளவன் வேளாளன். சேவலானது பேடுகள் அனைத்தையும் தன்வசப்படுத்தி வைத்திருப்பது போலக் குடிக்குரிய பண்புகளைப் பேணுதல் வேண்டும். பிராமணன் எல்லோருடனும் மாறுபாடு கொள்ளாது. ஒற்றுமையாக வாழ வேண்டும். அழகும், நல்லபண்புகளும், அறிவும் உள்ளவள் மனைவி. சேனைகளோடு ஒன்று பட்டு உடனுறைபவன் சேனாதிபதி. இவ்வாறு பெரியவர்கள் கூறியபடி ஒவ்வொரு வர்ணத்தினரும் வாழ்ந்தால் தான் சமூக நீதி பேணப்படும்” என்றார் கதிரேசன்.

**56. யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்**
**கடும்பரிமாக் காதலித்(து) ஊர்வர் -**
**கொடுங்குழை**
**நல்லாரை நல்லவர் நாணுவப்பர் அல்லாரை**
**அல்லார் உவப்பது கேடு.**

கதிரேசன் வீட்டுக்கு வந்தபோது அவரது மூத்தமகனும் மனைவியும் பிள்ளைகளும் வந்திருந்தனர். அவனைக்கண்டதும் அவரது மனைவி அன்னபூரணி சொன்னாள், “தம்பி வெளியூர் போவதற்காக ஆசிபெறக் காலையில் வந்து விட்டான். நீங்கள் இவ்வளவு நேரமும் எங்கே சென்றீர்கள்? அவன் அவசரமாகச் செல்ல வேண்டுமென்றான். கையைக்கழுவி விட்டு வாருங்கோ எல்லோரும் உங்களுக்காகக் காத்திருக்கிறோம்” என்றாள்.

“மகனே, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பமுண்டு. பெரியவர்கள் அவற்றைத் தீர்த்து வைத்தல் வேண்டும். எனக்கு உன்னில்

விருப்பம். உனக்கு என்னிலும் எமது குடும்பத்திலும் விருப்பம். ஒவ்வொருவரும் நல்லவற்றில் விருப்பங்கொள்ளல் வேண்டும். அப்போது தான் நல்ல வாழ்க்கை கிடைக்கும். யானையை வைத்திருப்பவர்கள் அது சினங்கொள்வதை விரும்புவார்கள். அது சினங் கொண்டால் தனது சினத்தைப் பாரந்தூக்குவதில் காட்டும். அரசர்கள் விரைவாக ஓடும் குதிரைகளை விரும்புவர். நல்லியல்புகளை உடைய ஆடவர்கள் நன்மங்கையரின் நாணத்தை விரும்புவர். தீயவர்கள் தீய பெண்களின் பெண்மையை விரும்புவர். பேரம்பலத்தின் மனைவி நல்லவள். அவன் தீய பெண்களை விரும்புவதால் அவள் தனது தாய் வீட்டுக்குச் சென்று விட்டாள். அதனால் தான் பிரச்சனை'' என்றவாறு உணவு உண்ணத் தொடங்கினார் கதிரேசன்.

**57. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்**
**துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்**
**ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை**
**ஈன்றாளோ(டு)**
**எண்ணக் கடவுளும் இல்.**

‘‘இன்று மகனின் குடும்பம் வந்தமையால் கறிகள் யாவும் அமிழ்தம் போல் இருக்கின்றன. ஒருவனுக்கு கண்களைவிட மேலான உறுப்பு வேறு எதுவும் இல்லை. குலமகளுக்குக் கணவனை விட மேம்பட்ட உறவினர் எவரும் இல்லை. பெற்றொருக்கு மக்களை விடச் சிறந்தவர்கள் யாருமில்லை. குழந்தைகளுக்குத் தாயைவிட மேலான கடவுள் இல்லை என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அது இன்று தெரிகிறது'' என்றார் கதிரேசன்.

**58. கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்**
**செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர் - தெற்றென**

**உற்ற துரையாதார் உள்கரந்து பாம்புறையும்**
**புற்றன்னர் புல்லறிவி னார்.**

“அப்பா, கற்றவர்களோடு விரும்பிக்கூடியிருப்பவர்கள் எல்லோரும் கற்றவர்கள் தான். நல்ல ஒழுக்கமில்லாதவர்கள் தீயவருடன் கூடியிருப்பார்கள். உண்மை பேசாதவர்கள் பகைவர்களாவர். சிற்றறிவுடையவர்கள் பாம்பின் புற்றுக்குச் சமனானவர்கள்”. என்று பெரியவர்கள் கூறியதாக எமக்குக் கூறினீர்கள். ஆனால் இப்போ சிற்றறிவுடைய பாம்புப் புற்றைப் போன்றவர்களுடன் தானே நீங்கள் கூடியிருக்கிறீர்கள்” என்றான் கதிரேசனின் மகன்.

**59. மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்**
**வேண்டா வினையும் பெறுபவே – யாண்டும்.**
**பிறப்பார் பிறப்பார் அறனின் புறுவர்**
**துறப்பார் துறக்கத் தவர்.**

“மகனே, சான்றோர்கள் சிறந்த செயல்களைச் செய்வார்கள். துன்பப்பட்டவர்களுக்கு உதவுவார்கள். மாட்சிமை இல்லாவதவர்கள் தான் தாம் செய்த தீவினைப் பயன்களை அனுபவிப்பர். உயர்குடியிற் பிறந்தவர்கள் நல்லவற்றைச்செய்து இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ்வர். தீயவர்களுக்கும் உதவிகள் செய்வது நல்லவர்களின் இயல்பு. அதுபோலப் பற்றற்றவர்கள் வீட்டின்பத்திற்கேதுவான செயல்களையே செய்வர். பேரம்பலம் தீயவன் ஆனால் பிள்ளைகள் ஏதுமறியாதவர்கள் அதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடாது”. என்றார் கதிரேசன்.

**60. என்றும் உளவாகும் நாளும் இருசுடரும்**
**என்றும் பிணியும் தொழிலொக்கும் - என்றும்**

**கொடுப்பாரும் கொள்வாரும் அன்னர் பிறப்பாரும்**
**சாவாரும் என்றும் உளர்.**

“இவருக்கு எதுவும் சொல்ல முடியாது. நல்ல நாட்களென்றாலும் அவர் ஊர்வேலை பார்க்கப் புறப்பட்டு விடுவார்” என்றாள். அன்னபூரணி.

கதிரேசன் சிரித்தார். பின்பு சொன்னார், “நட்சத்திரங்களும் சூரிய சந்திரர்களும் என்றும் உள்ளவை. அதுபோல நோயும் முயற்சியும், ஈவாரும் ஏற்பாரும் என்றும் உள்ளன. பிறப்பும் இறப்பும் என்றும் உண்டு என்று நினைத்து நாம் வாழுதல் வேண்டும். இவை இல்லை என்று நினைப்பவர்கள் தான் தாம் நினைத்தவாறு நடந்து துன்பப்படுகின்றனர். அப்படித் துன்பப் படுவோருக்கு உதவுவோரும் உதவாதோரும் என்றும் இருப்பர்” என்றார் கதிரேசன்.

**61. இனிதுண்பான் என்பான் உயிர்கொல்லா(து)**
**உண்பான்**
**முனிதக்கான் என்பான் முகனொழிந்து வாழ்வான்**
**தனியன் எனப்படுவான் செய்தநன் றில்லான்**
**இனியன் எனப்படுவான் யார்யார்க்கே யானும்**
**முனியா ஒழுக்கத் தவன்.**

அப்போது அங்கேநடராசா மிகுந்த கோபத்துடனும் கவலையுடனும் வந்து சொன்னான், “பேரம்பலத்திற்கு எந்த உபதேசம் செய்தாலும் ஏறாது. தனது காரியம் பார்ப்பதற்காகப் பெருமாள் கோயில் மாடு மாதிரி தலையாட்டுவான். பின்பு பழையபடி கொடுமைகள் செய்வான். அவனது கையாட்கள் இரவு எனது தோட்டத்தில் நின்ற ஆட்டுக்கடாவைத் திருடிச் சென்று அறுத்து இறைச்சியை விற்று விட்டார்கள்” கோபப்பட்டான் நடராசா.

“எந்த உயிரையும் கொல்லாது காய்கறிவகைகளைச் சமைத்து உண்பவனே இனிய உணவை உண்பவனாவான். முகமலர்ச்சியில்லாமல் அடங்காத சினத்துடன் வாழ்பவன் எல்லோராலும் வெறுக்கப்படுவான். யாருக்கும் உதவி செய்யாதவன் துணையில்லாதவனாகி விடுவான். நல்ல ஒழுக்கமுடையவன் தான் இனியவனென எல்லோராலும் பாராட்டப்படுவான். இவை எதுவுமில்லாததால் தான் பேரம்பலம் இகழப்படுகிறான். இவனுக்கு உபதேசம் எதுவும் ஏறாது” என்று பெருமூச்சு விட்டார் கதிரேசன்.

**62. ஈத்துண்பான் என்பான் இசைநடுவான் மற்றவன்**
**கைத்துண்பான் காங்கி எனப்படுவான் தெற்ற**
**நகையாகும் நண்ணார்முன் சேறல் பகையாகும்**
**பாடறியா தானை இரவு.**

“நான் இனிமேல் இவனுக்கு வேலை செய்து கொடுக்கமாட்டேன். வேலைக்குச் செல்லாவிட்டால் காணும் இடங்களிலெல்லாம் ஏசுவான். நன்றாக ஏசட்டும். பிறருக்குக் கொடுத்து உண்பவன் தான் புகழுடையவன். கொடுப்பவனது கைப்பொருளையே பறித்துண்பவன் கொடிய அவாமிக்கவன். விருப்பமில்லாதவரின் வீட்டுக்குச் செல்வது இகழ்ச்சியாகும். அத்துடன் தகுதியில்லாதவனிடம் யாசிப்பதோ அல்லது அவனிடம் கூலிக்காக வேலை செய்வதோ பாவம். அத்துடன் அது பகையாகியும் விடும்” என்றான் நடராசா.

**63. நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்பழல் சேர்ந்து**
**வழுத்த வரங்கொடுப்பர் நாகர் - தொழுத்திறந்து**
**கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி**
**நன்றூட்ட நந்தும் விருந்து.**

“நெய்யை அக்கினியில் விட்டால் தீ வளர்த்து பிரகாசித்து எரியும். தன்னை வருத்தித் தொழுதால் தேவர்கள் உதவி செய்வர்.

கன்று பால் குடிக்கக்குடிக்கப் பசு பாலைப் பெருக்கித் தரும். நல்ல முறையில் விருந்தளித்தால் விருந்தினர் மகிழ்வர் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள். நான் உடலை வருத்தி நல்ல முறையில் ஒழுங்காக வேலை செய்கிறேன். அதனால் எல்லோரும் என்னைக் கொண்டே வேலை செய்விக்க விரும்புகின்றனர். பேரம்பலம் வேலை செய்பவர்களுக்கு ஒழுங்காகக் கூலியும் உணவும் கொடுப்பதில்லை. அதனால் யாரும் வேலைக்குச் செல்லமாட்டார்கள்'' என்றான் நடராசா.

**64. பழியின்மை மக்களாற் காண்க; ஒருவன்**
**கெழியின்மை கேட்டால் அறிக பொருளின்**
**நிகழ்ச்சியான் ஆக்கம் அறிக புகழ்ச்சியால்**
**போற்றிதார் போற்றப்படும்.**

''கதிரேசண்ணை , ஒருவன் நன் மக்களைப் பெறுவதன் மூலம் போற்றப்படுவான் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நீங்கள் நல்ல மக்களைப்பெற்றிருக்கிறீர்கள். அது போல ஊரில் நன் மக்களைப் பெற்றோர் போற்றப்படுகின்றனர். எனது பிள்ளைகளையும் நன் மக்களாக்கினால் கூலி வேலை செய்யும் என்னையும் எல்லோரும் போற்றுவார்கள். அத்துடன் நல்ல நண்பர்களைப் பெற்றவனுக்குப் பொருட்தட்டுப்பாடு உண்டாகாது. அதனால் எனக்குப் பொருட்தட்டுப்பாடும் இல்லை. செல்வத்தைப் பெருகினால் ஆக்கம் உண்டாகுமென்று நினைத்துச் செல்வத்தைச் சிறிது சிறிதாகச் சேர்க்கிறேன். நல்லொழுக்கமுள்ளவனை யாபேரும் போற்றுவார். நான் ஒழுக்கமுடன் வேலை செய்வதால் தான் ஊரில் உள்ளவர்கள் என்னை மதிக்கிறார்கள். அதனால் நான் முன்னேறுவேன்'' என்று மகிழ்வுடன் சொன்னான் நடராசா.

**65. கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றாம் -**
**பெண்ணின்**
**உருவின்றி மாண்ட வுளவாம் - ஒருவழி**
**நாட்டுள்ளும் நல்ல பதியுள — பாட்டுள்ளும்**

**பாடெய்தும் பாடல் உள.**

“நடராசா, கண்களுள்ளும் கவர்ச்சியான கண்கள் உண்டு. எல்லோருடைய கண்களும் கருணை உள்ள கண்கள் அல்ல. அதுபோல அழகில்லாத பெண்களிடத்தும் குடும்பத்திற்குரிய நற்பண்புகள் உண்டு. எமது நாட்டின் ஒரு பகுதி வளமுள்ளது. மறுபகுதி வளமில்லாதது. அது போல பாடல்களிலும் இனிமையான பாடல்களும் வெறுப்பைத்தூண்டக் கூடிய பாடல்களும் உண்டு. உலகம் இருமைப்பட்டது. நன்மையும் உண்டு, தீமையும் உண்டு, நீ மிகவும் நல்லவன். உனது பிள்ளைகள் உனக்குப் பேரையும் புகழையும் பெற்றுத்தருவார்கள்” என்றார் கதிரேசன்.

**66. திரியழல் காணில் தொழுப விறகின்**
**எரியழல் காணின் இகழ்ப – ஒருகுடியில்**
**கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்.**
**இளமைபா ராட்டும் உலகு.**

“திரியில் எரியும் தீச்சுடர் புனிதமானது, வணக்கத்திற்குரியது. விறகில் எரியும் தீச்சுடரை யாரும் மதிப்பதில்லை. அதுபோல ஒழுக்கமுடையவனின் குடிதான் உயர்ந்தது. ஒழுக்கமில்லாத தனவந்தனின் குடி தாழ்ந்தது. ஒரு குடும்பத்தில் படித்தவனுக்குத் தான் மதிப்பு அதிகம். மூத்தவன் படிக்காவிட்டால் இளையவன் படித்திருந்தால் அவன் தான் எல்லோராலும் மதிக்கப்படுவான். அதனால் உனது பிள்ளைகள் ஐவரையும் எப்பாடுபட்டாவது கற்பி. எந்த வேளையிலும் எந்த உதவியையும் செய்ய நான் தயாராக இருப்பேன்”. என்றார் கதிரேசன்.

**67. கைத்துடையான் காமுற்ற(து) உண்டாகும்**
**வித்தின்**
**முளைக்குழாம் நீருண்டேல் உண்டாம்**
**திருக்குழாம்**
**ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாக்கும்**
**மற்றவள்**
**துன்புறுவாள் ஆகிற் கெடும்.**

"செல்வமுடையவன் விரும்பியவற்றையெல்லாம் விரும்பியபடி பெறுவான். ஆனால் அதில் ஒழுக்கமிருந்தால் தான் செல்வம் நிலைக்கும். அது போல நீர் இருந்தால் தான் விதைகள் முளைக்கும். திருமகளின் அருள் இருந்தால் தான் செல்வம் சேர்ந்து பெருகும். திருமகளின் அருள் அகன்றால் சேர்ந்த செல்வம் அழிந்துவிடும். திருமகளின் அருள் ஒழுக்கத்தினால் தான் கிடைக்கும். இரவும் பகலும் கடவுளை வணங்குவதில் பிரயோசனமில்லை. ஒரு கணமென்றாலும் மனதில் அழுக்குகள் இல்லாமல் வணங்குதல் வேண்டும். ஒழுக்கமாக வாழ வேண்டும். புறஞ்சொல்லக் கூடாது. மற்றவர்களை இகழக்கூடாது. பிற உயிர்களைக் கொன்று தின்னக்கூடாது" என்றார் கதிரேசன்.

**68. ஊனுண்(டு) உழுவை நிறம்பெறூ உம்**
**நீர்நிலத்துப்**
**புல்லினான் இன்புறூ உம் காலேயம் - நெல்லின்**
**அரிசியான் இன்புறூஉம் கீழெல்லாம் தத்தம்**
**வரிசையால் இன்புறூஉம் மேல்.**

"புலி ஊன் உண்டு இன்புறும். மந்தைகள் புல்மேய்ந்து இன்புறும். கீழ் மக்கள்சோறு உண்டு இன்புறுவர். மேலோர் தங்கள் தகுதிக்கேற்ற செயல்களைச் செய்து இன்புறுவர். வாழ்க்கை இன்பமானது. அதைத் துன்பமாக்குவது மனிதனது ஆசைகள். அதனால் வேண்டாத ஆசைகளை மனதில் வளர்த்தலாகாது. நல்ல செயல்களைச் செய்வதில் ஆசை

கொள்ளல் வேண்டும். ஆசைப்பட்டால் மட்டும் போதாது. அவற்றைச் செய்தல் வேண்டும். பெரிதாகக் கொடுப்பது தான் ஈகை என்று பலரும் நினைக்கிறார்கள். மற்றவர்களுக்குத் துன்பம் வரக்கூடாது என்று எண்ணுவதும் ஈகை தான் மேலான செயல். எண்ணங்கள் தான் செயல்களாக மாறுபவை. எனவே எண்ணங்கள் எப்போதும் தூய்மையானவையாக இருத்தல் வேண்டும்''. என்றார் கதிரேசன்.

**69. பின்னவாம் பின்னதிர்க்கும் செய்வினை –**
**என்பெறினும்**
**முன்னவாம் முன்னம் அறிந்தார்கட் - கென்னும்**
**அவாவாம் அடைந்தார்கட்(கு) உள்ளம் -**
**தவாவாம்**
**வாவிலார் செய்யும் வினை.**

'' தன்னால் இயலாது என்று தெரிந்த செயல்களைப் புகழுக்காகச் செய்யக் கூடாது. ஆராந்து செயலைச் செய்யத் தொடங்கியவர்களுக்குச் செயலைச்செய்யு முன்பே அச் செயலால் என்னென்ன துன்பங்கள் வரும் என்று தெரியும். ஒரு பொருளைப் பெற்றவர்களுக்கு அதன்மேல் பற்றுண்டாகும். அப் பொருளின் மீதுள்ள பற்றின் காரணமாகத்தான் அவர்கள் அப்பொருளைப் பெற முனைகிறார்கள். பற்றில்லாதவர்கள் செய்யும் செயல்கள் ஒரு போதும் நிறைவேறாதிருக்கமாட்டாது. பற்றில்லாதவர்கள் பிறரின் நன்மை கருதியே செயல்களைச் செய்கின்றனர். எனவே ஒரு செயலைச் செய்ய முன் நன்கு ஆராய்ந்தபின் செய்'' என்றார் கதிரேசன்.

**70. கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க்**
**காப்பாரின்**

**வைத்தாரின் நல்லர் வறியவர் - பைத்தெழுந்து**
**வைதாரின் நல்லர் பெறுபவர் - செய்தாரின்**
**நல்லர் சிதையா தவர்.**

சிவநாதன் பெரும் தனவந்தனான தில்லையம்பலத்தின் வீட்டில் கூலி வேலை செய்பவன். அவன் வேலை செய்யும் போது காயமேற்பட்டதால் அவனால் வேலை செய்யமுடியவில்லை. அவனுக்கு மூன்று பிள்ளைகள். மூவரும் கெட்டிக்காரர்கள். சிவநாதன் நோயுற்றதால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அதனால் சிவநாதன் சுகமடையும்வரையும் உதவி செய்யுமாறு தில்லையம்பலத்தை இரந்து கேட்டான். அவன் மறுத்து விட்டான். அதனால் சிவநாதன் கதிரேசனிடம் வந்தான்.

‘‘செல்வம் இருந்தும் அதை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தாதவர்களை விட வறியவர்கள் நல்லவர்கள். செல்வமுள்ளவன் அதை நல்ல வழியில் செலவு செய்து தானும் அனுபவிக்கவேண்டும். அது தான் செல்வம் பெற்றவனுக்குச் சிறப்பும் பெருமையும் . தானும் அனுபவிக்காது பிறருக்கும் கொடாது இருப்பவன் அச் செல்வத்தை இழந்துவிட்டால் அவன் வறியவர்களை விடக் கேவலமானவனாகி விடுவான். எதற்கும் சினந்தும் மற்றவர்களை வைதும், குறை கூறியும் வாழ்வோரை விட அவர்கூறும் கடுஞ்சொற்களைப் பொறுப்பவர்கள் மேலானவர்கள். அது உதவிகள் செய்பவர்களிலும் பார்க்க அவ்வுதவியைப் பெற்றவர் நன்றியுடன் வாழ்ந்தால் அப்படி வாழ்பவர் கொடுப்பவரிலும் சிறந்தவர். ஆகையால் நன்றியுடன் வாழ். உனக்குத் தில்லையம்பலம் பல உதவிகள் செய்திருப்பார். அதனால் குறை நினைக்காதே. உனது நோய் குணமாகும் வரை நான் உதவி செய்கிறேன்’’ என்றார் கதிரேசன்.

**71. மகனுரைக்கும் தந்தை நலத்தை ஒருவன்**
**முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை –**

அகல்நீர்ப்

**புலத்தியல்பு புக்கான் உரைக்கும் நிலத்தியல்பு**
**வானம் உரைத்து விடும்.**

“கதிரேசண்ணை, தந்தையின் பெருமைகளைத் தனயன் மூலம் உணரலாம் என்று பெரியவரகள் கூறுவார்கள். உங்களின் தந்தை ஊரில் உள்ள பாடசாலையையும் கோயிலையும் கட்டுவித்தவர். அவர் பாடசாலையைக் கட்டாவிட்டால் ஊரில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கும் பாடசாலைக்கு யாரும் சென்று கல்வி கற்றிருக்க மாட்டார்கள். உங்களின் தந்தையின் சேவையால் இன்று ஊர்கல்வியில் மேம்பட்டிருக்கிறது. உங்கள் தந்தையைப் போலவே நீங்களும் சேவை செய்கிறீர்கள். வயலின் தன்மையை விவசாயியின் மேன்மையைக் கொண்டு அறியலாம். ஊர்மக்களின் இயல்பை ஊரில் பெய்யும் மழையைக் கொண்டு அறியலாம். அதுபோல நீங்கள் செய்யவிருக்கும் நன்மைகளை நாம் உங்கள் முகத்தில் இருந்து அறிந்து கொள்வோம்”. உணர்ச்சி வயப்பட்டான் சிவநாதன்.

**72. பதிநன்று பல்லார் உறையின் ஒருவன்**
**மதிநன்று மாசறக் கற்பின் - நுதிமருப்பின்**
**ஏற்றான்வீ றெய்தும் இனநிரை தான்கொடுக்குஞ்**
**சோற்றான்வீ றெய்துங் குடி**

“வேலை செய்விப்பவர்கள் போர் தொழிலாளிகளின் நலத்தையும் பேணவேண்டும். நாம் கொடுக்கும் சம்பளத்திற்குத் தானே அவன்வேலை செய்கிறான் என்று நினைத்தால் இருவரும் அன்னியப்பட்டு விடுவார்கள். அதன்பின் தொழிலாளி விருப்புடன் வேலை செய்யமாட்டான். தொழிலாளர்கள் விருப்புடன் வேலை செய்தால் தான் உற்பத்தி பெருகி முதலாளி நன்றாக வாழ்வான். ஊரவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் தான் ஊர் செழிக்கும். ஒருவன் ஐயம் திரிபுறக்கற்றால் தான் அவனது

அறிவு விருத்தியாகி மேலோங்கும். பசுக்கூட்டங்கள் காளைகளுடன் நின்றால் தான் பட்டி பெருகும். அதுபோல ஏழைகளுக்கு உணவளித்து உதவிகள் பலவும் செய்தால் தான் ஒருவனது குடி சிறப்படைந்து மேலோங்கும். இதை ஊரில் உள்ள தனவந்தர்கள் உணர்கிறார்கள் இல்லை'' என்று கவலைப்பட்டார் கதிரேசன்.

**73. ஊர்ந்தான் வகைய கலினமா – நேர்ந்தொருவன்**
**ஆற்றல் வகைய அறஞ்செய்கை தொட்ட**
**குளத்தனைய தூம்பின் அகலங்கள் தத்தம்**
**வளத்தனைய வாழ்வார் வழக்கு.**

''கதிரேசு, எதையெதைச் செய்யவேண்டுமெனத் தீர்மானிப்பது அவரவரது மனது. உதவி செய்தல், கொடுத்துதவுதல் யாவும் அவரவரது குடிப்பிறப்பின் தன்மையைப் பொறுத்தே அமையும். சவாரி செய்பவனது திறமைக்கு ஒத்தன தான் குதிரைகள். ஒருவனது அறச் செயல்கள் அவனது ஆற்றலைப் பொறுத்தே அமையும். நீரின் அளவு குளத்தின் ஆழத்தைப் பொறுத்து அமையும். அது போல இல்லறத்தாரின் வாழ்க்கை அவர்களது வருமானத்தைப் பொறுத்தே அமையும் என்பது பெரியோர்களின் வாக்கு. ஆனால் பலரின் வாழ்வு வருமானத்தைப் பொறுத்து அமையாமல் அவர்களின் மனதைப் பொறுத்தே அமைகிறது. அதை நாம் எந்த வகையாலும் திருத்த முடியாது. ஒவ்வொருவனும் தானாக முன் வந்து அறச் செயல்களைச் செய்தல் வேண்டும். சொல்லிச் செய்விக்க முடியாது'' என்றார் திருநாவுக்கரசு.

**74. ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமும்**
**நாழிகை யானே நடந்தன – தாழியாத்**
**தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர்**
**வெட்கென்றார்.**
**வெஞ்சொலால் இன்புறு வார்.**

உண்மை தான். ஊழிகள் ஆண்டுகளால் கணக்கிடப்பட்டுக் கழியும். யாமப் பொழுது நாளிகைகளால் அளந்து கழிக்கப்படும். அறிஞர்கள் கற்றுத் தெளிந்தவர்களிடம் காலம் தாழ்த்தாமல் தமது ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைவர். அதுபோல அறிவில்லாதவர்கள் பிறரைக் கடிந்து பேசி வீணாக மகிழ்ந்திருப்பர். அறிவில்லாதவர்கள் தம்முள் அறிவுள்ளவர்களைப் போல நடந்து கொள்வார்கள். இவர்கள் கற்றவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்வதில்லை. தாம்தாம் அறிவுள்ளவர்கள் என்று நினைத்துத் திமிராக நடந்து கொள்வர். அத்துடன் இவர்களிடம் பணமிருந்தால் அவர்களது அடாவடித்தனத்திற்கு அளவே இருக்காது. தில்லையம்பலம் பெருந்தனவந்தன். அதனால் அறிவுள்ள சிலரும் அறிவில்லாத பலரும் அவனுடன் கூட இருந்து அவனைச் செயற்படுத்துகிறார்கள். அவன் செய்வது மிகச்சரியானது என்று கூறுகிறார்கள். அதனால் தான் அவன் எல்லோரிடத்திலும் திமிராக நடந்து கொள்கிறான்''. என்றார் கதிரேசன்.

**75. கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத**
**பேதையான் வீழ்வானேல் கால்முரியும் எல்லாம்**
**ஒருமைத்தான் செய்த கருவி தெரிவெண்ணின்**
**பொய்யாவித் தாகி விடும்.**

கதிரேசனது மூத்தமகன் பதவி உயர்வு பெறுவதற்கான பரீட்சை எழுதியபோதும் அதில் அவன் சித்தியடையவில்லை. அதனால் அவன் மனமுடைந்து விரக்தியடைந்து வேலைக்குச் செல்லாது வீட்டில்

இருந்தான். அதனால் கதிரேசன் அவனருகிற் சென்று அன்புடன் சொன்னார், " மகனே, வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் வரும். அதற்கெல்லாம் கவலைப்பட்டால் வாழமுடியாது. மனக்குழப்பத்தை விட்டு விட்டு வேலைக்குச் செல்''.

''முடியவில்லை அப்பா. நான் நன்றாகப் படித்துத் தான் பரீட்சை எழுதினேன். ஆனால் சித்தியடையவில்லை. அதைத் தாங்கிக் கொள்ள என்னால் முடியவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் யோசிக்கிறேன். இப்போது என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்'' என்றான் அவரது மூத்தமகன்.

அப்போது திருநாவுக்கரசு சொன்னார், " கதிரேசு, கல்வி அறிவில்லாதவன் மனக்குழப்பமடைந்தால் அவனால் அதிலிருந்து மீள முடியாது திண்டாடுவான். அவனால் சிந்தித்துச் செயற்படமுடியாது. மற்றவர்கள் சொல்வதையும் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் கற்றவன் தளர்ந்தாலும் அவன் மீண்டெழுந்து தான் நினைத்தவற்றைச் சாதித்து விடுவான். அதனால் அவனை அவனது போக்கில் விட்டுவிடு. ஒரு பிறப்பில் செய்தவை தான் மறுபிறப்பில் வரும். அதை உணர்ந்து அவன் பழைய நிலைக்கு வருவான். மெய் உணர்வு வீடு பேற்றிற்குத் தவறாது உதவுவது போலக் கல்வி தளர்ச்சியைத் தவறாது நீக்கும்''. என்றார்.

**76. தேவர் அனையர் புலவரும் தேவர்**
**தமரனையர் ஓரூர் உறைவார் - தமருள்ளும்**
**பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்.**
**கற்றாரைக் காத லவர்.**

''உங்கள் மகன் கல்வியறிவாளன் மட்டுமல்ல பெரும் புலவன். புலவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள். அதிபர் தணிகாசலம் அடிக்கடி உங்கள் மகனின் புலமையைப்புகழ்வார். அவனோடு கூட இருப்பது

தேவர்களோடு உடனிருப்பதைப் போன்றதென்றும், அவனோடு கூட இருந்து கதைத்தால் கதைப்பவர்களும் புலவர்களாகி விடுவார்கள் என்றும் கூறுவார். அத்துடன் அவனது மாணவர்கள் எல்லோரும் மிகத் திறமை சாலிகள் என்றும் சொல்வார். அதனால் அவனைப் பற்றிய கவலைகளை விடு'' என்றார் திருநாவுக்கரசு.

'' எனக்கு அவனைப் பற்றிக் கவலை இல்லை. வீணாக துன்பப்படுகிறான் என்று நினைத்துச் சொன்னேன். கற்றவர்களும் சில சமயங்களில் அறியாமையால் துன்பப்படுவர். அவர்கள் கற்ற கல்வி அந்த அறியாமையை நீக்கும் என்று எனக்குத் தெரியும்'' என்றார் கதிரேசன்.

**77. தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே**
**மருத்துவன்**
**சொல்கின்ற போழ்தே பிணியுரைக்கும் - நல்லார்**
**விடுகென்ற போழ்தே விடுக உரியான்**
**தருகெனின் தாயம் வகுத்து.**

''பேரம்பலம் நடராசாவுக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடுக்கிறானில்லை. நடராசா அன்றன்று உழைத்து உண்பவன். பிள்ளைகள் படிக்கிறார்கள். பேரம்பலம் ஒழுங்காகக் கூலியைக் கொடாமையால் நடராசா பேரம்பலத்திற்கு வேலை செய்ய விரும்புவதில்லை. அதனால் அவன் செய்து முடித்த வேலைக்கான

கூலியையும் கொடுக்கிறானில்லை. நேற்றுக் கொடுக்கிறணெண்டவனாம். ஆனால் கொடுக்கவில்லை'' என்று கவலைப்பட்டார் திருநாவுக்கரசு.

" பொய் சொன்னால் நட்புக் கெட்டுவிடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் பொய் சொன்னால் வாழ்வே அழிந்துவிடும் என்று பேரம்பலம் ஏன் உணர்கிறானில்லை. மருந்துவன் நோயைப் பற்றிச் சொல்லென்ற போது நோயாளி மறைக்காமல் தனக்குள்ள நோய் முழுவதையும் சொல்லுதல் வேண்டும். உனக்குள்ள பிரச்சனைகளைக் கூறு என்று பேரம்பலம் சொன்னபோது நோயாளி வைத்தியனுக்குக் கூறுவது போல நடராசா மறைக்காது எல்லாவற்றையும் கூறியுள்ளான். அப்படியிருந்தும் கொடுக்காத பேரம்பலத்திற்குச் சொல்லும் புத்திமதிகள் வீணானவை. பெரியயவர்கள் ஒரு செயலைச் செய்யாதே என்று சொன்னால் அதைச் செய்யாமல் விடுபவன் தான் ஒழுங்கான மனிதன். அதோடு உரியவன் தனக்குரியதைக் கேட்கும் போது அதைத் தாமதியாது கொடுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மானம் மரியாதையை இழக்கவேண்டிவரும்'' என்றார் கதிரேசன்.

**78. நாக்கின் அறிப இனியதை - மூக்கினான்**
**மோந்தறிய எல்லா மலர்களும் நோக்குள்ளும்**
**கண்ணினால் காண்ப அணியவற்றைத்**
**தொக்கிருந்து**
**எண்ணிணான் எண்ணப்படும்.**

''மானம் மரியாதை உள்ளவன் பெரியவர்கள் சொல்வதைக்கேட்பான், உரியவன் தனக்குரியதைக் கேட்டதும் கொடுத்து விடுவான். இவன் உதவாதவன். எப்படிச் சொன்னாலும் கேட்கமாட்டான். சுவையை நாக்கினால் அறிந்து கொள்ளலாம். மலரின் நறுமணத்தை மூக்கினால் அறிந்து கொள்ளலாம். அழகிய பொருட்களைக் கண்களால் கண்டறியலாம். நல்ல கருத்துக்களை அறிஞர்களோடு கூடியிருந்து அறியலாம். அதுபோல ஒரு மனிதனை, அவனின் செயல்கள் மூலம்

அறிந்து கொள்ளலாம். அப்படி அறிந்தமையால் தான் நடராசா பேரம்பலத்தின் சகவாசமே வேண்டாமென்று விட்டு விட்டான்'' என்றார் திருநாவுக்கரசு.

**79. சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்**
**தாவாத இல்லை வலிகளும் - மூவாது**
**இளமை இசைந்தாரும் இல்லை – வளமையில்**
**கேடின்றிச் சென்றாரும் இல்.**

''உலகில் உள்ளவை எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து விடும் என்பதை யாரும் நினைக்கிறார்கள் இல்லை. உலகத்தில் உள்ள உயிர்கள் யாவும் உரிய காலத்தில் இறந்துவிடும். பெரும் வலிமை உடையவனானாலும் காலப்போக்கில் அவ் வலிமை சிறிது சிறிதாகக் குறைவடைந்து ஈற்றில் இல்லாமற்போய் விடும். அதுபோலத்தான் இளமையும் நிலையானதல்ல. இன்று பேரழகியாய் இருப்பவள் படிப்படியாக இளமை குலைந்து கிழவியாகி விடுகிறாள். அதுபோல செல்வமும் குறையாத அல்ல. இருபது வருடங்களுக்கு முன்பு பெருந்தனவந்தனான செல்லப்பா இன்று உடுக்கக்கூடத்துணியில்லாமல் இருக்கிறான். இருபது வருடங்களுக்கு முன் கடன் தொல்லை தாங்கமுடியாது ஊரைவிட்டு ஓடிய சின்னத்துரையின் பிள்ளைகள் வெளிநாட்டிற்குச்சென்று ஓகோவென்று வாழ்கிறார்கள். தலைமறைவான சின்னத்துரை இன்று வெளிநாடொன்றில் பிள்ளைகளுடன் ஆடம்பரமாக வாழ்கிறான். இதெல்லாவற்றையும் பேரம்பலத்திற்குச் சொல்லியும் புரிந்துகொள்கிறானில்லை. பணம் எத்தனை காலத்திற்குக் கூட இருக்கும். பணம்போனால் தான் இவன் பாடம் படிப்பான்''. என்றார் கதிரேசன்.

**80. சொல்லான் அறிப ஒருவனை – மெல்லென்ற**
**நீரான் அறிப மடுவினை – யார்கண்ணும்**
**ஒப்புரவினான் அறிப சான்றாண்மை மெய்க்கண்**

மகிழான் அறிப நறா.

அப்போது பேரம்பலத்தின் மனைவியின் சகோதரனான தில்லையம்பலம் வந்து சொன்னான், “ஐயா, ஒருபெண் தன் கணவனோடு வாழ்வது தான் பெருமை. அதுபோலத் தமது மனைவியின் மனதைப் புண்படுத்தாது இருப்பது தான் ஆண்களுக்குப் பெருமை. பேரம்பலம் எனது சகோதரியை மிருகத்தை விடக் கேவலமாக நடத்துகிறான். அவனோடு எனது சகோதரியைச் சேர்த்து வைக்காதீர்கள். அவனோடு அவளால் ஒருசில நிமிடங்கள் கூட மகிழ்ச்சியாக வாழ முடியாது. தயவு செய்து பிள்ளைகளையும் தாயுடன் சேர்ந்து வாழ வையுங்கள்” என்று அழுதான்.

கதிரேசன் அவனது வார்த்தைகளைக் கேட்டு உருகிப்போனார், “ஒருவனது குணத்தை அவன் கூறும் வாய்ச் சொற்கள் மூலம் அறியலாம் என்றும், மடுவின் மண் தன்மையை அதன் தெளிந்தநீரால் அறியலாம் என்றும், பெருந்தன்மையை அவனது நடுவு நிலையால் அறியலாமென்றும் , தீய குடியை அவர்களது உண்மையற்ற பேச்சின் மூலம் அறியலாமென்றும் அறிஞர்கள் கூறியுள்ளனர். பேரம்பலம் எப்போதும் தனது மைத்துனனான தில்லையம்பலத்தைப் பற்றிக் கூடாமல் சொல்வான். ஆனால் அவனது வாய்ச்சொல்லில் ஆணவமோ, திமிரோ, இருக்கவில்லை. பணிவும் மென்மையும் தான் இருந்தது. அதனால் அவன் நல்லவனாக இருப்பான் என நம்பினார் கதிரேசன்.

**81. நாவன்றோ நட்பறுக்கும் தேற்றமில் பேதை**
**விடுமன்றோ வீங்கிப் பிணிப்பின் அவாஅப்**
**படுமன்றோ பன்னூல் வலையில் கெடுமன்றோ**
**மாறுள் நிறுக்குந் துணிபு.**

“பதறிய நாக்கினால் நட்புக்கெடும். கட்டாயப்படுத்தினால் தெளிவில்லாத பேதை மக்கள் நற்செயல்களைக் கைவிட்டு விடுவார்கள். நூல்களைக் கற்பதனால் மாணவர்களினது தீய செயல்கள் குறைவடையும். தேவையில்லாமல் எவரோடும் பகைப்பவன் விரைவில்

கெட்டழிந்து போவான்'' எனப் பெரியவர்கள் கூறியது உண்மை. நாக்குத்தான் நன்மைக்கும் தீமைக்கும் காரணமாக அமைவது. தில்லையம்பலம் எவ்வளவு அடக்கமாகக் கதைக்கிறான். அவனது வார்த்தைகளுக்கு மறுவார்த்தை கூற இந்த ஊரில் யாராலும் முடியாது. அவனை நாம் சமாதானப்படுத்தினாலோ கட்டுப்படுத்தினாலோ அவனது நல்ல குணங்கள் மாறிக் கெட்ட குணங்கள் வந்து விடும். கற்றவர்களானாலும் எதையும் பக்குவமாக எடுத்துச் சொன்னால் தான் ஏற்பார்கள். வற்புறுத்தினால் அவர்களது குணங்களும் மாறுபாடு அடையும். பேரம்பலத்தின் பிள்ளைகள் தீய வழியிற் செல்லக்கூடாதென்பதற்காக நானும் தணிகாசலமும் அறிவைத்தரும் பல நூல்களை வாங்கிக்கொடுத்துள்ளோம். அவை அவர்களின் தீய எண்ணங்களைக் கட்டாயம் மாற்றும். எனவே தில்லையம்பலம், பகையை வளர்க்காதே. பகை வளர்ந்தால் நல்ல செயல்களும் நல்லவர்களும் விட்டுச்சென்றுவிடுவர். அதனால் நீ அமைதியாக ஊருக்குச்செல். நான் உன்னை உனது ஊரில் வந்து சந்திக்கிறேன்'' என்றார் கதிரேசன்.

**82. கொடுப்பின் அசனம் கொடுக்க – விடுப்பின்**
**உயிரிடை ஈட்டை விடுக்க எடுப்பிற்**
**கிளையுட் கழிந்தார் எடுக்க கெடுப்பின்**
**வெகுளி கெடுத்து விடல்.**

''தில்லையம்பலம், நீ கொடுக்கவிரும்பினால் ஏழைகளுக்கு உணவு கொடு. விடுவதனால் பற்றுக்களை விடு. எடுப்பதானால் சுற்றத்தாருள் ஏழைகளை மேலுயர்த்து. கொடுப்பதாயின் உனது சினத்தை விட்டுவிடு. பேரம்பலம் நடராசாவுக்கு வேலை செய்தவகையில் பல ஆயிரம் ரூபாக்கள் கொடுக்க வேண்டும். அதைக் கொடுக்கிறானில்லை. நீ தனவந்தன். அக்கடனைத் தீர்க்குமாறு நான் சொல்லவில்லை. முடிந்தால் நடராசாவுக்கு உதவி செய். அவன் உணவுக்கே கஷ்ரப்படுகிறான். பற்றுக்களை நீ விட்டுவிட்டு வெள்ளை மனதுடன் சிந்தித்துப்பார்த்தால் அவை விளங்கும். அத்துடன் நடராசா

உனது இனத்தவன். ஏழை . அவனது பிள்ளைகள் கற்க உதவி செய்தாயேயானால் அவர்கள் மேல்நிலையடைந்து விடுவார்கள். அத்துடன் காரணமின்றிப் பகை கொள்ள வைப்பது சினம். அதனால் சினத்தை விட்டு விட்டு யோசித்துப் பார். உனது சகோதரியின் வாழ்க்கை சிறப்படைந்தால் தான் அவளது வம்சம் உயரும்'' என்றார் கதிரேசன்.

**83. நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்**
**குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம்**
**வளமில் குளத்தின் கீழ் நெற்சாம் பரமல்லாப்**
**பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.**

''தில்லையம்பலம், அழகும் இளமையும் வறுமையால் கெட்டுவிடும். குலத்தின் உயர்வும் ஒழுக்கமும் கல்லாமையாற் கெடும். நீரில்லாத ஏரியால் நெற் பயிர்கள் கருகி அழியும். பெருஞ்சுமையை வண்டியில் ஏற்றினால் எருதுகள் நோய்வாய்ப்பட்டு இறக்கும்''என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நடராசாவின் மனைவியைப் பார். குமர்ப்பிள்ளையில் அவள் பேரழகி. பணமில்லாததால் தான் தகப்பன் அவளை நடராசாவுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். ஏழ்மை காரணமாக நல்ல உணவு உண்ணாமையால் அவளது உடல் உருக்குலைந்து விட்டது. பிள்ளைகளும் எலும்பும் தோலுமாக உலவுகின்றனர். அதனால் அவர்களால் கல்வி கற்க முடியவில்லை. கற்காவிட்டால் குலத்தின் ஒழுக்கமும் உயர்வும் கெட்டுவிடும் என்பதற்காகவும் கல்லாத ஒரு குடும்பம் உருவானால் பிற்காலத்தில் கல்லாத பல குடும்பங்கள் உருவாகிவிடும் என்பதற்காகவும் நான் உதவிகள் செய்கிறேன். குளத்தில் நீரில்லாவிட்டால் அதை நம்பியுள்ள பயிர்கள் எரிந்து நாசமாகி விடும். கால் நடைகள் இறந்து விடும். பெரும் சுமையை ஏற்றினால் எருதுகள் நோயுற்றுச் சாவது போல நடராசா

பெரும் சுமையைச் சுமக்கிறான். அதைவிடப் பேரம்பலம் பெரும் சுமையாக இருக்கிறான். அதனால் அவனுக்கொன்று நடந்தால் அந்தக் குடும்பம் அந்தரித்துப்போம். அதனால் நீ கட்டாயம் அவனுக்கு உதவி செய்தல் வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**84. நல்லார்க்கும் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்**
**செல்வார்க்கும் தம்மூரென் றூரில்லை –**
**அல்லாக்**
**கடைகட்கும் தம்மூரென் றூரில்லை தங்கைத்(து)**
**உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.**

''பேரம்பலம், கற்றவர்களுக்கு அவர்கள் செல்லுமூர்களெள்லாம் அவர்களது ஊர்களாக மாறும். அதுபோலப் பொருள் உள்ளவர்களுக்கும் அவர்கள் செல்லுமூரெல்லாம் அவர்களின் ஊர்களாக மாறும். கீழ் மக்களுக்கு அவர்கள் வாழும் ஊரிலும் மதிப்பில்லை. அதனால் அவர்கள் செல்லும் ஊர்களிலும் மதிப்பிராது. அதனால் கீழ் மக்களுக்குத் தம்மூர் என்று ஓர் ஊர் இல்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நடராசாவின் குடும்பத்திற்கு உதவிகள் செய்து அதைக் கற்ற குடியாக மாற்று. நடராசாவின் பிள்ளைகள் கல்வியில் மிகவும் திறமைசாலிகள். அவர்கள் நல்ல முறையில் கற்றால் ஊருக்கும் பெரும் உதவி. அத்துடன் அவர்கள் மிகமிக நல்லவர்கள் உனக்கு எப்போதும் விசுவாசமாக இருந்து உதவுவார்கள்'' என்றார் கதிரேசன்.

**85. கல்லா ஒருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்**
**மெல்லிலை வாழைக்குத் தானீற்ற காய்கூற்றம்**
**அல்லவை செய்வார்க்கு அறங்கூற்றம் கூற்றமே**

**இல்லத்துத் தீங்கொழுகு வாள்.**

“தில்லையம்பலம், நீ கற்றவன். பேரம்பலம் பெரிதாகக் கற்காதவன். இரண்டு பேர்களினதும் நடத்தையில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டு. உனக்கு யாவும் சொல்லாமலே புரியும். ஆனால் பேரம்பலத்திற்குச் சொன்னாலும் புரியாது. கற்காதவர்களின் வாயில் பிறக்கும் சொற்கள் அவர்களுக்கு யமனாக வந்து சேரும். பேரம்பலம் சிவசுந்தரத்துடன் முரண்பட்டவன். சிவ சுந்தரம் ஓர் அப்பாவி. ஒரு சிற்றுயிருக்குக் கூடத் துன்பம் செய்யாதவன். பேரம்பலம். அடிக்கடி சிவசுந்தரத்தைக் கேலி செய்வான். தரக்குறைவாகப் பேசுவான். அவமானப் படுத்துவான். அதனால் கோபமடைந்த சிவசுந்தரம் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டான். பேரம்பலம் படுகாயமடைந்த போது நீ சிவசுந்தரத்தைக் கொல்ல வேண்டுமென்ற வெறியுடன் வந்தாய். ஆனால் நிலமையை உணர்ந்து சிவசுந்தரத்தை மன்னித்து அவனைத் தண்டனையில் இருந்து காப்பாற்றினாய். அப்பொழுது நீ சொன்னாய், “அண்ணை, தீயவை செய்வோருக்கு அறக்கடவுளே கூற்றுவனாக வந்து தண்டனை கொடுப்பார்” என்று. நன்மை செய்பவர்கள் பிறருக்காகத் தம்முயிரையும் கொடுப்பார்கள். வாழை மரத்தை எடுத்துப்பார். அதன் குலை தான் அதற்குக் கூற்றுவனாவது. தீயவர்கள் திருந்த மாட்டார்கள். ஒரு கணவனுக்கு, அவனுக்குத் தெரியாமல் இன்னொரு ஆடவனுடன் கள்ளத் தொடர்பு வைத்துள்ள மனைவி தான் கூற்றுவன். எனவே கல்லாதவர்களை நாம் உருவாக்கக் கூடாது” என்றார் கதிரேசன்.

**86. நீரான்வீ றெய்தும் விளைநிலம் நீர் வழங்கும்**

**பண்டத்தால் பாடெய்தும் பட்டினம் -**

**கொண்டாளும்**

**நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவன்**

**ஆடலாற் பாடு பெறும்.**

“விளை நிலம் நீர் பாய்ச்சுவதன் மூலம் செழிப்படையும். பட்டணங்கள் கடல் வளத்தால் பெருமையடையும். மன்னர்கள் தாம்

ஆளும் நாட்டின் வளத்தால் பெருமையடைவர். கூத்தில் வல்லவன் தனது நடனத்திறமையால் மேம்படுவான். இவ்வாறு பெரியவர்கள் கூறியுள்ளனர். விளைநிலம் நல்ல விளைச்சலைத் தரவேண்டுமானால் வற்றாத நீரூற்றுள்ள ஆழமான பெரிய குளம் அருகில் இருத்தல் வேண்டும். பட்டணத்தைச் சுற்றிச் சமுத்திரமிருந்தால் கப்பல் வாணிபத்தின் மூலம் பெரும்பொருள் சம்பாதிக்கலாம். மன்னர்களின் பெருமையைப் பறைசாற்றுவது நாட்டின் வளங்கள். குறைவில்லாத நீரும், செழிப்பான களனிகளும், குறைவில்லாத செல்வங்களையுமுடைய நாட்டினால் மன்னன் பெருமை பெறுவான். அதுபோல நடனத்தில் வல்லவன் தனது ஆட்டத்திறமையால் பேரும் புகழும் பெறுவான். வறியவர்களுக்குக் கொடுப்பதால் தான் சாதாரண மக்கள் புகழ்பெறுவார்கள் என்றும், அப்புகழ் உலகம் உள்ளவரை நிலைத்திருக்குமென்றும், இவர்களை அப்புகழ் உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும் என்றும் இவர்களை மக்கள் தேவர்களை விடப் போற்றி வணங்குவார்கள் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். அதனால் நீ நடராசாவுக்கு உன்னாலான உதவிகளைச் செய்'' என்றார் கதிரேசன்.

**87. ஒன்றூக்கல் பெண்டிர் தொழில்நலம் - என்றும்**
**நன்றூக்கல் அந்தணர் உள்ளம் பிறனாளும்**
**நாடூக்கல் மன்னர் தொழில்நலம் கேடூக்கல்**
**கேளிர் ஓரீஇ விடல்.**

''தில்லையம்பலம் , அறவழியில் ஈடுபடுவதோடு மற்றவர்களையும் அறவழியிலீடு படச்செய்து ஆன்மாக்களுக்குச் விடுதலை அளிப்பதே அந்தணர்களுக்குச் சிறப்பாகும். பிறநாடுகளைக் கைப்பற்றி நீதிநெறி தவறாது நாட்டை ஆள்வதே மன்னர்களுக்குச் சிறப்பு. அதுபோல கணவனோடு ஒன்றாக வாழ்ந்து பெற்றோர், உறவினர்கள், துறவிகள் ஏழைகள், அனாதைகள், தன் குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர் போன்றோரை அன்புடன் வரவேற்று அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வது தான் இல்வாழ்க்கையின் இலட்சியம். அதற்குக்

கணவனோடு மனைவி சேர்ந்திருத்தல் வேண்டும். கணவன் தன் மனைவியைத் தனது கண்களைப் போலப் பாதுகாத்தல் வேண்டும். அப்படியில்லாத கணவன் அமையப்பட்ட பெண்கள் தீவினையாளராவர். இருப்பினும் மனைவி கணவனுடன் சேர்ந்திருப்பது தான் நல்லது. அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறத்தையே. இது துறவறத்திலும் மேம்பட்டது. இதை உணராமையால் தான் உலகில் தீமைகள் நடைபெறுகின்றன. அத்துடன் ஒருவன் தனது உறவினரை நீங்கி வாழ்தல் அக்குடும்த்தின் அழிவுக்குக் காரணமாகிவிடும். இதைக் கல்லாதவர்கள் உணராவிட்டாலும் பரவாயில்லை கற்ற உன் போன்றவர்கள் உணருதல் வேண்டும்''. என்றார் கதிரேசன்.

**88. கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்**
**தள்ளாமை வேண்டும் தகுதி உடையன**
**நள்ளாமை வேண்டும் சிறியரோடு யார்மட்டும்.**
**கொள்ளாமை வேண்டும் பகை.**

''கொடுமையான பல துன்பங்கள் சேர்ந்து வந்து தாக்கினாலும் தன் நிலை மறந்து ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. முக்கியமாகக் களவெடுக்கக் கூடாது, பொய் சொல்லல் ஆகாது, பலர் நல்ல நிலையில் இருந்தாலும் சந்தற்பத்திற்கேற்றவாறு தம்மை மாற்றிக்கொள்வர். முருகேசன் பெருந்தனவந்தனாக இருந்தான். வியாபாரத்தில் நட்டமடைந்ததும் வாங்கிய கடன்களைக் கொடுக்காது தலைமறைவாகி விட்டான். தனபாலன் வியாபாரத்தில் பெரும் நட்டமடைந்தபோது ஊரில் உள்ளவர்களைத் தனது வியாபாரப் பங்காளிகளாகச் சேர்த்து அவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு ஊரைவிட்டுச் சென்று விட்டான். சிவலிங்கம் தங்க ஆபரணங்களை வாங்கிக்கொண்டு வட்டிக்குப் பணம் கொடுத்தவன். பின் நகைகளுடன் தலை மறைவாகி விட்டான். துன்பம் வந்த போதும் தீயவர்களுடன் சேராதிருத்தல் தான் நற்குடியில் பிறந்தவனது இயல்பு. எவரிடத்திலும் பகை கொள்ளாமால் வாழுதல் வேண்டும். நல்ல ஒழுக்கங்களைக்

கடைப்பிடித்தல் வேண்டும். தனவந்தனாக இருக்கும்போது ஒழுக்கமில்லாதவனாக வாழ்கிறான். ஆனால் நடராசா தாங்கமுடியாத பல துன்பங்கள் வந்தபோதும் களவெடாது ஒழுக்கமாக வாழ்கிறான். அதனால் அத்துடன் தன்னைப் பகைப்பவர்களையும் அவன் பகைப்பதில்லை. அவனுக்கு நீ உதவி செய்தல் வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**89. பெருக்குக நட்டாரை நன்றின்பால் உயர்த்துத்**
**தருக்குக ஒட்டாரைக் காலம் அறிந்தாங்கு**
**அருக்குக யார்மாட்டும் உண்டி சுருக்குக**
**செல்லா இடத்துச் சினம்.**

''நண்பர்களையும் உறவினர்களையும் அவர்கள் நன்றாக வாழும்போது உதவி செய்து உயர்த்துதல் வேண்டும். பகைவர்களைக் காலமறிந்து தான் வெல்லுதல் வேண்டும். எவ்வளவு தான் நெருக்கமான உறவினராக இருந்தாலும் அடிக்கடி அவரின் வீட்டுக்குச் சென்று உண்ணக்கூடாது. அத்துடன் பலமுள்ளகளுடன் கோபங் கொள்வதைத் தவிர்த்தல்வேண்டும். பேரம்பலம் தனது நண்பனானகதிரமலையின் வீட்டுக்கு அடிக்கடி போகிறான். கதிரமலை மிகவும் கஷ்டப்பட்டிருந்த போதுபேரம்பலம் தான் உதவிகள் பலவும் செய்தவன். அதனால் தான் கதிரமலை இன்று பெரும் பணக்காரனாக இருக்கிறான். அந்த நன்றிக்காகக் கதிரமலை இப்போது பேரம்பலத்திற்கும் பிள்ளைகளுக்கும் தினமும் உணவு கொடுக்கிறான். இவன் அங்கு சென்று வருவதை பகைவர்கள் வேறுவிதமாகப் பேசுகின்றனர். அதனால் கதிரமலையின் மனைவி சகுந்தலா துன்பப்படுகிறாள். நடராசாவின் தாயார் வீடுகளில் சமையல் வேலை செய்பவள். நான் சொன்னால் போய்ச் சமைத்துக் கொடுப்பாள். ஆனால் பேரம்பலம் கூலி கொடுக்கமாட்டான். ஒவ்வொருவனைப் பற்றியும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். நடன பாதம் முரடன் கொடுப்பதை அன்றே மறப்பவன். அவனுடன் பேரம்பலம் கொடுக்கல்வாங்கல் பிரச்சினையில் முரண்பட்டுச் சண்டை பிடித்தான்.

நடனபாதமும் அவனது நண்பர்களும் சேர்ந்து பேரம்பலத்தைத் தாக்கி விட்டார்கள். ஒருவனது குணத்தை அறிந்தபின்பு தான் பழக வேண்டும். அவனது பலத்தை அறிந்த பின் தான் சினம் கொள்ளல் வேண்டும். இதெல்லாம் தெரியாதவனாகத் தான் பேரம்பலம் இருக்கிறான்''. என்றார் கதிரேசன்.

**90. மடிமை கெடுவார்கண் நிற்கும் கொடுமைதான்**
**பேணாமை செய்வார்கண் நிற்குமாம் பேணிய**
**நாணின் வரை நிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த**
**தூணின்கண் நிற்குங் களிறு**

''யானை தன்னைக் கட்டிய தூணருகே நிற்கும். நற்குணமுள்ள பெண்கள் நாணத்தால் உயர்ந்து நிற்பர். சான்றோர் விரும்பாதவற்றைச் செய்வோர் தீமையான பயனை எதிர்நோக்குவர். கெடுவாரிடத்தில் சோம்பல் மிகுந்திருக்கும்'' என்ற கதிரேசன் திருநாவுக்கரசுவைப் பார்த்ததுச் சொன்னார், '' கெட்டுப்போக நினைப்பவர்கள் தம் கருமங்களைச் செய்யச் சோம்பற்படுவர். நீ உனது வயலை உழவில்லை. ஏனைய விவசாயிகள் உழுது பண்படுத்தி விதைப்புக்குத் தயாராகி விட்டனர். உனது வயலில் புற்கள் இருப்பதால் கால் நடைகள் அங்கு வருகின்றன. மற்றவர்கள் விதைத்தபின் எப்படி இயந்திரத்தை எப்படி வயலுக்குக் கொண்டு செல்வாயென உனது தந்தையார் கவலைப்பட்டார் மேலோர்கள் விரும்பாதவற்றைச் செய்யக் கூடாது. உனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாகவே நீ இப்போது நடக்கிறாய். அது தீமையானது என்று உனக்குத் தெரியாதா? யானைகட்டிய தூணோடு நிற்பதைப் போலச் சான்றோர் மேலோரின் விருபப்படியே நடப்பர். நல்லியல்புகள் உள்ள பெண்கள் நாணத்தின் எல்லையில் நிற்பது போல நல்லவர்கள் பெரியோரின் மனவிருப்பின் எல்லையில் நிற்றல் வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**91. மறையறிய அந்தண் புலவர் முறையொடு**
**வென்றி அறிப அரசர்கள் - என்றும்**
**வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு அ்.தன்றி**
**அணங்கல் வணங்கின்று பெண்.**

“ திருநாவுக்கரசு , அந்தணர்கள் நான்கு மறைகளினதும் பொருளைச் சந்தேகமின்றி அறிந்திருத்தல் வேண்டும். அரசர்கள் அரசாளும் முறைகளையும் வெற்றிபெறும் முறைகளையும் அறிந்திருத்தல் வேண்டும். சான்றோர்கள் என்றும் பணிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். பெண்கள் கணவனைத் தெய்வமாகப் பூசித்தல் வேண்டும்” என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன்படி வாழ்பவன் தான் முழுமனிதன். ஒவ்வொருவரும் தத்தம் குலவாழக்கப்படி வாழா விட்டால் சமூகத்தின் ஒழுக்கம் தளர்ந்துவிடும். அந்தணர்கள் நான் குவேதப் பொருட்களையுமறியாவிட்டால் குலத்துக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் அழிவு உண்டாகும். குடும்பப் பெண்கள் தம்கணவர்களை மதித்து நடக்காவிட்டால் குடும்பத்தின் ஒழுக்கம் தளர்வடைந்து விடும். குடும்ப ஒழுக்கம்தான் நாட்டின் ஒழுக்கமாக அமைவது. அதனால் தான் பெரியவர்கள் அப்படிக் கூறினார்கள். பெரியவர்கள் எப்பொழுதும் எந்நிலையிலும் பணிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். நீ பணிவுள்ளவனாக இருத்திருந்தால் வயலை உழாது விட்டிருக்க மாட்டாய். நமக்குத் தீமை ஏற்பட்டாலும் பரவாயில்லை. பிறருக்குத் தீங்கு ஏற்படக் கூடாது என்றே சான்றோர் விரும்புவர்” என்றார் கதிரேசன்.

**92. பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்**
**காப்பினும்**
**பெட்டாங்(கு) ஒழுகும் பிணையிலி – முட்டினும்**
**சென்றாங்கே சென்றொழுகும் காமம் கரப்பினும்**
**கொன்றான்மேல் நிற்குங் கொலை.**

‘‘நல்ல பெண்கள் உயிர் போனாலும் கற்பொழுக்கத்தைத் வழுவவிடமாட்டார்கள். நற்பண்புகள் இல்லாத பெண் எவ்வளவு தான் காவல் செய்தாலும் பிற ஆடவனோடு கூடி மகிழ்வாள். எவ்வளவு இடையூறுகள் , தீமைகள், தண்டனைகள் கிடைத்தாலும் காம இயல்பு மேம்பட்டவர்கள் அதிலிருந்து விடுபட மாட்டார்கள். கொலைப்பழியை எப்படித்தான் மறைத்தாலும் உரிய நேரத்தில் அது வெளிப்படும் என்று பெரியவர்கள் கூறியிருக்கின்றனர். நல்லவர்கள் நல்லவையெல்லாம் தமது கடமைகள் என்றுணர்ந்து பிறர் சொல்லாமலே தமது கருமங்களையும் தம்மால் பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் ஒழுக்கத்துடனும் நெறிமுறையுடனும் செய்து முடிப்பர். உன்னை நான் ஒரு கனவான் என்றே நினைத்திருக்கிறேன். காரணங்கள் பலவும் இருக்கலாம். ஆனால் அவை யாவும் சரியானதாக இருப்பதில்லை. தீமை செய்தவர்கள் நன்மையை அனுபவிக்க முடியாது. கொலையை இரகசியமாகச் செய்தாலும் கொலையாளி இறைவனின் தண்டனையில் இருந்து தப்பமாட்டான் என நினைத்துக் கொண்டு வயலை உழு’’ என்றார் கதிரேசன்.

**93. வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்**
**இன்கண் பெருகின் இனம்பெருகும் சீர்சான்ற**
**மென்கண் பெருகின் அறம் பெருகும் வன்கண்**
**கயம் பெருகின் பாவம் பெரிது.**

‘‘திருநாவுக்கரசு, கீழ்யைான குணங்கள் மனதில் மிகுந்திருந்தால் தீவினைதான் மிகுதியாக வரும். அஞ்சாமை மனதில் மிகுந்திருந்தால் வலிமை பெருகி நல்வாழ்விற்கு உறுதுணையாகும். மனைவி இரக்கம் உள்ளவளாக வாழ்ந்தால் அக்குடும்பத்திற்குச் சுற்றம் பெருகும். அருளும் இரக்கமும் மனதில் மிகுந்திருந்தால் வாழ்வில் அறவினைகள்

மிகுந்திருக்கும் என்பதை நீ அறியவில்லையா? அஞ்சாமை மனதில் மிகுந்திருக்கும் அதிபர்தணிகாசலத்தைப் பார். அவரைக் கல்வி அமைச்சரே மதித்துக் கௌரவித்துள்ளார். தீவினை மிகுதியாக உள்ள பேரம்பலத்தை ஊரவரும் உறவினரும் பெற்றோர் மனைவி மக்களும் வெறுக்கின்றனர். எனது மனைவி இரக்கமுள்ளவளாக வாழ்வதால் ஊரவர்கள் அனைவரும் அவளின் இனிய சுற்றத்தினராக இருக்கின்றனர். மனதில் அருளும் இரக்கமும் இருந்தால் மற்றவர்கள் எமக்குச் செய்பவை யாவும் நன்மையானவைகளாகவே இருக்கும். நல்வற்றைத் தீயதாகவும், தீயவற்றை நல்லவையாகவும் மாற்றுவது மனம். அதனால் உனது மனதில் அருளையும் அன்பையும் உண்டாக்கு. செய்பவையாவும் நல்லவையாகவே இருக்கும்'' என்றார் கதிரேசன்.

**94. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**
**வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்**
**கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் குற்றம்**
**தமரல்லார் கையகத்(து) ஊண்.**

அப்போது அங்கே தணிகாசலமும் வேறு சில ஆசிரியர்களும் இரண்டுமாணவர்களுடன் வந்தனர். அவ்விருவரும் நடராசாவின் பிள்ளைகள் கதிரேசனையும் திருநாவுக்கரசுவையும் கண்ட தணிகாசலம் சொன்னார், ''கதிரேசண்ணை, நடராசாவின் பிள்ளைகள் இவர்கள். நன்றாகப் படிப்பார்கள். தாயும் தகப்பனும் வேலைக்குச் சென்றதும் இவர்கள் பாடசாலைக்கெனப் புறப்பட்டு கோவில் மரங்களில் ஏறி மறைந்திருக்கிறார்கள்'' என்றார்.

கதிரேசன் தில்லையம்பலத்திற்குச் சொன்னார், “ இளம் பருவத்தில் கற்காமல் இருப்பது குற்றம். நடராசா இவர்கள் பாடசாலைக்குச் சென்றுவிட்டார்கள் என்று நினைத்து வேலைக்குச் செல்ல இவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இளமையில் கல்வியில் வெறும் பேற்படுவது இயற்கை. அதிபர் அக்கறையுள்ளவராக இருப்பதால் அவர் பிள்ளைகளையும் பெற்றோர்களையும் தெரிந்து வைத்திருக்கிறார். நடராசாவின் மூத்த சகோதரன் சிவராசா. நடராசாவுக்கு அடிக்கடி உதவி செய்வான். அவன் பெரும்வசதியானவன் அல்ல. பெரும் வசதியில்லாதவனால் தனது குடும்பத்தைப் பராமரிப்பதே கஷ்டம். பொருளில்லாதவர்கள் தானம் செய்தால் தமது குடும்பத்தை ஒழுங்காகக் கவனிக்க முடியாது. சிவராசாவோடும் பேரம்பலம் அடிக்கடி முரண்படுவான். சிவராசா முரடன். அத்துடன் அயலவருடன் முரண்படாது நடப்பவன். அதனால் சில சமயங்களில் சிவராசா பேரம்பலத்தைத் தாக்கியும் விடுவான். நான் பேரம்பலத்திற்கு, “உறவினர்களுடன் முரண்படுபவர்கள் பிறருடன் சினத்தல் கூடாது” என்று சொன்னாலும் கேட்கமாட்டான். உள்ளன்பு இல்லாதவர்கள் வீட்டில் உண்பது குற்றம். ஆனால் பேரம்பலம் போகக் கூடாத வீடுகளுக்கெல்லாம் சென்று உணவு உண்கிறான்” என்றார் கதிரேசன்.

**95. எல்லா இடத்தும் கொலைதீது மக்களைக்**
**கல்லா வளர விடல்தீது – நல்லார்**
**நலம்தீது நாணற்று நிற்பின் குலம் தீது**
**கொள்கை யழிந்தக் கடை.**

“கொள்கையில்லாமல் வாழ்வது குலத்திற்குத் தீங்காகும். கண்டபடி பேசுவான். கண்டபடி நடப்பான் கண்டவர்களின் வீடுகளில் உண்பான் மனிதனுக்குச் கொள்கை இருத்தல் வேண்டும். நாணமின்றிப் பெண்பிள்ளைகளை வளர்ப்பது தீது. பேரம்பலத்தினது மகள் தகப்பன் என்று நினைக்காது நாணமில்லாத பேச்சுக்களைப் பேசுகிறாள், சிறு

பிள்ளை தான். ஆனால் தொட்டிற் பழக்கம் சுடுகாடுவரை இருக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள் . அதனால் அவளை யாரும் பிற்காலத்தில் திருமணம் செய்யவிரும்பமாட்டார்கள். கெட்டிக்காரி. ஆனால் வீட்டு வேலைகள் செய்விப்பதற்காகப் பேரம்பலம் அவளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. அதிபர் கேட்டால் ஒவ்வொரு சாட்டுச் சொல்வான். கொள்கையில்லாமல் வாழ்தல், பிள்ளைகளைக் கற்பிக்காதிருத்தல் என்பன கொலை செய்வதால் வரும் குற்றத்திற்குச் சமமானதாகும். அதனால் பிள்ளைகளின் எதிர்கால நன்மைக்காக உனது சகோதரியை அனுப்பி வை'' என்றார் கதிரேசன்.

**96. ஆசாரம் என்பது கல்வி; அறஞ்சேர்ந்து**
**போகம் உடைமை பொருளாட்சி; யார்கண்ணும்**
**கண்ணோட்டம் இன்மை முறைமை;**
**தெரிந்தாள்வான்**
**உண்ணோட்டம் இன்மையும் இல்.**

''ஆசாரம் என்று சொல்லப்படுவது கல்வி. கல்வியால் தான் நல்லொழுக்கம் உண்டாகும். செல்வத்தின் பயன் அறம் செய்தலும் அதனால் வரும் இன்பத்தை அனுபவித்தலுமாம். யாரிடமும் இரக்கம் காட்டாமல் பிரச்சினைகளை நடுவு நிலை நின்று ஆராய்வது அரசாளும் முறையாகும். தான் செய்பவற்றை மனதுள்ச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து தீயவற்றை விலக்கி நல்லவற்றைச் செய்பவன் வாழும் வழியறிந்தவன். அதனால் தான் நான் உனக்கு இவற்றைச் சொல்கிறேன். சமூகஅமைப்பைச் சீர்தூக்கிப்பார். நல்லவர்களைவிடத் தீயவர்கள் தான் அதிகமாக வாழ்கின்றனர். அதை விடக் கற்றவர்களும் தனவந்தர்களும்

தான் அதிகமாகத் தவறுகளைச் செய்கின்றனர். அவர்கள் கற்ற கல்வியும் தேடிய செல்வமும் இதனால் பயனற்றுப்போகின்றன. நீயும் அந்த நிலைக்கு வராதே. திருமணமாகிக் குழந்தைகளைப் பெற்ற பின் பிரிவென்பதைப் பெண்கள் நினைக்கவே கூடாது. பிரிவால் ஏராளமான தீமைகள் தான் உண்டாகும் . அதனால் சிந்தித்துப் பார்''என்றார் கதிரேசன்.

**97. கள்ளின் இடும்பை களியறியும் நீர் இடும்பை**
**புள்ளினுள் ஓங்கல் அறியும் நிரப்பிடும்பை**
**பல்பெண்டிர் ஆளன் அறியும் கரப்பிடும்பை**
**கள்வன் அறிந்து விடும்.**

''துன்பங்கள் பலவகை. கள்ளருந்துபவனுக்குக் கள் கிடைக்காமையால் உண்டாகும். துன்பத்தை கள்ளுக்குடிப்பவனே அறிவான். நீர்பெறாமையால் ஏற்படும் துன்பத்தை வானம்பாடியறியும். பொருள் இன்மையால் உண்டாகும். துன்பத்தை மனைவியர் பலரை உடைய கணவன் அறிவான். ஒளித்து வைப்பதினால் உண்டாகும் துன்பத்தைத் திருடன் அறிவான். அது போல மனைவி இல்லாத துன்பத்தை மனைவியைப் பிரிந்த அல்லது இழந்த கணவன் அறிவான். எனது மனைவியின் பெற்றோர் வெகுதூரத்தில் உள்ள ஊரொன்றில் வாழ்கின்றனர். திடீரென்று எனது மனைவியின் தகப்பனார் காலமாகி விட்டார். அதனால் எனது மனைவி அங்கு சென்று ஒருமாதம் தங்கிவிட்டாள். அந்த நாட்களில் எனக்கு உலகே இருண்டு விட்டது. கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. நடைப்பிணமாகவே நான்

வாழ்ந்தேன். சில நாட் பிரிவே இப்படியானால் முழுமையான பிரிவு எத்தனை துன்பங்களைத் தரும் என்று சிந்தித்துப் பார்'' என்றார் கதிரேசன்.

**98. வடுச்சொல் நயமில்லார் வாய்த்தோன்றும்;**
**கற்றார்வாய்ச்**
**சாயினும் தோன்றா கரப்புச்சொல் - தீய**
**பரப்புச்சொல் சான்றோர்வாய்த் தோன்றா;**
**கரப்புச்சொல்**
**கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.**

''அன்பில்லாதவர்கள் ஒருபோதும் இன்சொல்லோ அல்லது நல்ல சொற்களோ பேசார். அதனால் அவர்களது பேச்சால் பழி தான் உண்டாகும். கற்ற நல்லவர்கள் தான் தமக்குப் பழியேற்படக் கூடாதென்பதற்காக இன் சொல்லைப் பேசுவார்கள். அதனால் வஞ்சனையும் பழியும் உண்டாகாது. அதற்காகத் தான் மேன் மக்கள் தீமை வந்துவிடுமென்று அஞ்சி நன்மைகள் தரும் சொற்களைப் பேசுகிறார்கள். ஆனால் கீழ்மக்களின் வாயில் எப்பொழுதும் பொய்யான வார்த்தைகள் தான் தோன்றும். அதனால் மேன்மகனான நீ தீமைகள் பலவற்றையும் தரும் வன்சொற்களைப் பேசாதே. துன்பமான முடிவை எடுக்காதே''. என்றார் கதிரேசன்.

**99. வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்**
**சாலும் அவைப்படின் கல்லாதான் பாடிலன்**
**கற்றான் ஒருவனும் பாடிலனே கல்லாதார்**
**பேதையார் முன்னர்ப் படின்.**

பேரம்பலம், ''கற்றவர்கள் உள்ள அவையில் கல்லாதவர்கள் பெருமையில்லாதவர்களாவர். அதுபோலக் கல்லாதவர்களின் சபையில் கற்றவன் பெருமையில்லாதவனாவான். அறிவில்லாதவர்களின் சபையில் அறிஞர்கள் பெருமை அடைவர். அழகான பெண்களுக்கு முன்

அழகில்லாத ஆடவன் மதிக்கப்படமாட்டான். இது உலக இயல்பு. அதுபோலத் தீயவன் மீண்டும் மீண்டும் தீமைகள் பலவும் செய்வானே தவிரத் திருந்தமாட்டான். பேரம்பலத்தைப் பேசினால் முரண்படுவான். அன்புடன் சொன்னால் அப்போதைக்குச் சம்மதிப்பான். அதனால் அவன் மனம் குழம்பும் வேளைகளில் அருகில் இருந்து நல்லுபதேசத்தைச்செய்ய அன்பான ஒருவர் தேவை . அது மனைவியால் தான் முடியும். அதற்குப் பொறுமையும் பக்குவமும் தேவை. நற்குணமுள்ள உனது சகோதரியால் அது முடியுமென நான் நினைக்கிறேன். அதற்கு நீதான் உதவி செய்தல் வேண்டும். உனது சகோதரிக்கு நிலைமையை நன்கு விளக்கிக் கூறி அனுப்பி வை'' என்றார் கதிரேசன்.

**100. மாசு படினும் மணிதன் குன்றாதாம்**
**பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்**
**பாசத்துள் இட்டு விளக்கினுங் கீழ் தன்னை**
**மாசுடைமை காட்டி விடும்.**

''மாசு படிந்தாலும் நல்ல மணியின் பெருமை குறைவடையாது. அழுக்காக இருக்கிறதே என்று இரும்பை நீரால் கழுவினால் அது துருப்பிடித்து அழியத் தொடங்கி விடும். அது போலக் கீழ் மக்களைத் தண்டித்தால் அவர்கள் முன்பு செய்ததைவிடக் கீழான செயல்களைத் தான் செய்வார்கள். அதோடு அறிவான வார்த்தைகளைக் கூறினாலும் அதைக்கேளாது கீழ்த்தரமான செயல்களைத் தான் செய்வார்கள். அதற்காக அவர்களுடன் முரண்படுவதோ, தண்டிப்பதோ கூடாது. முள்ளில் விழுந்த சேலையை மிகமிக அவதானமாக எடுப்பது போல மிகவும் அவதானமாகச் செயற்படல் வேண்டும். திருமணம் என்பது இறக்கும் வரையான இறுக்கமான உறவு. அதைப் பிரிப்பதால் பிரச்சினைகள் பலவும் தினமும் உருவாகுமே தவிரத் தீராது. பிரச்சனைகளால் மனக்குழப்பம் உண்டாகும். மனக் குழப்பம் நோய்களுக்கான காரணி. அதனால் மிகவும் அவதானமாகச் செயற்படல்

வேண்டும். இம்முறை மட்டும் இரக்கம் காட்டு. அளவுக்கு மீறினால் அமிழ்தும் நஞ்சாகும் என்றோர் முதுமொழி உண்டு. அதன்பின் யோசிப்போம்'' என்றார் கதிரேசன்.

**101. எண்ணொக்குஞ் சான்றோர் மரீஇயாரின்**
**தீராமை;**
**புண்ணொக்கும் போற்றார் உடனுறைவு; -**
**பண்ணிய**
**யாழொக்கும் நட்டார் கழறுஞ்சொல்**
**பாழொக்கும்**
**பண்புடையார் இல்லா மனை.**

''தில்லையம்பலம், நட்புடையவர்கள் இடித்துரைக்கும் சொற்கள் கடுமையானவை, துன்பம் தரக்கூடியவை, ஏற்கமுடியாதவை என்று நினைக்காதே. அவர்கள் கூறும் வலிமையான சொற்கள் துன்பப்படுபவர்களுக்கு மேலும் துன்பந் தருவதாக இருந்தாலும், அவை எதிர்காலத்தில் வரவிருக்கும் தீமைகளைத் தவிர்த்து நன்மையளிக்கும். சான்றோரின் அருகில் இருப்பது கடவுளின் அருகில் இருப்பதைப் போன்றது. என்றும் இனிமையையும் இன்பத்தையும் தருவது. தீயவர்களோடு நட்புப் பூண்பதும் அவர்களோடு இணைந்திருப்பதும் என்றும் தீமையையே தரும். உடலில் மாறாதிருந்து வலியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் புண்ணைப்போலவே தீயவர்கள் கூறும் வார்த்தைகளும், செய்யும் செயல்களும் நீக்கமுடியாத இன்னல்களைத் தந்து கொண்டிருக்கும். அதனால் தான் நல்லவனான உனக்குச் சொல்கிறேன். நீ உணர்ந்து கொள்வாய் என்றும் நம்புகிறேன்.

மனைமாட்சி இல்லாத மனைவியை உடைய வீடும் குடும்பமும் பாழடைந்த வீடாகவே இருக்கும். அங்கு எந்த நல்ல செயல்களும் நடைபெறாது. உறவினர்கள் தீயவிலங்குகளைப் போல நடந்து கொள்வார்கள்'' என்றார் கதிரேசன்.

**102. ஏரி சிறியதாயின் நீரூரும் இல்லத்து**
**வாரி சிறியதாயின் பெண்ணூரும் மேலைத்**
**தவஞ்சிறி தாயின் வினையூரும் ஊரும்**
**உரன்சிறி தாயின் பகை.**

``நாம் செய்யும் நற்செயல்கள் குறைவாக இருந்தால் தீவினை தான் மிகுந்துவரும். எப்போதும் நன்மை செய்பவன் எப்போதும் நன்மையை அடைவான். ஏரி சிறிதாக இருந்தால் பெய்யும் மழைநீர் வழிந்து ஓடி விடும். வருவாய் குறைவடைந்தால் மனைவி கணவனுக்கு அடங்கமாட்டாள். வலிமையில்லாது இருந்தால் பகைவர்கள் இலகுவாக வென்றிடுவர். பேரம்பலம் எந்த நற்செயலையும் செய்ததில்லை அதனால் அவனுக்கு உதவ யாரும் முன்வருவதில்லை. முன்வருபவர்களையும் அவன் சந்தேகிப்பான். தன்னிடம் எதையோ பெறத்தான் அவன் தன்னைச் சுற்றி வருகிறான் என நினைப்பான். வருவாய் குறைந்தாலும், அளவுக்கதிகமாகத் துன்பப்படுத்தினாலும் மனைவி சினந்து தான் எண்ணியபடி நடக்க ஆரம்பித்து விடுவாள். ஏரியை ஆழமாக்கினால் அதிகநீர் தங்கும். மனைவியோடு அன்பாக நடந்து கொண்டால் அவள் கணவனை விட்டுப் பிரியமாட்டாள். இதைப் பலமுறை கூறியும் பேரம்பலம் உணர்ந்து கொள்கிறனில்லை'' என்று வருத்தப்பட்டார் கதிரேசன்.

**103. வைதானால் ஆகும் வசையே; வணக்கமது**
**செய்ததனால் ஆகும் செழுகிளை செய்த**
**பொருளினால் ஆகுமாம் போதும் நெகிழ்ந்த**
**அருளினால் ஆகும் அறம்.**

“தில்லையம்பலம், பிறரை வைதால் வைதவனுக்குத் துன்பம் உண்டாகும். பிறரை மதித்து நடந்தால் பிறரும் நம்மை மதிப்பர். அத்துடன் நண்பர்கள் பெருகுவார்கள். நாம் இரங்கி உதவிகள் பலவும் செய்தால் புண்ணியம் சேரும் . கஷ்டப்பட்டுப் பொருளைத் தேடினால் இன்ப வாழ்க்கை உண்டாகும். பேரம்பலம் கஷ்டப்பட்டுப் பொருளைத் தேடிக் குவித்து வைத்திருக்கிறான். ஆனால் பிறரை மதிப்பதில்லை. துன்பப்படுபவர்களுக்கு இரங்கி எதுவும் கொடுப்பதில்லை. அதனால் சுற்றத்தவர்கள் இல்லாமல் இருக்கிறான் மதிப்பில்லாமால் வாழ்கிறான். நிம்மதி இல்லாமல் துன்பப்படுகிறான். இவையெல்லாம் தேவையானால் பிறரை மதிக்கவேண்டும். பிறருடன் அன்பாகப் பழகுதல் வேண்டும். பிறர்துன்பங்களைச் செய்தாலும் அவர்களுக்கு உதவுதல் வேண்டும். இவற்றைப் புரிந்து கொள்ளாமையால் தான் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் துன்பப்படுகிறான்” என்றார் கதிரேசன்.

**104. ஒருவன் அறிவானும் எல்லாம் யாதொன்றும்**
**ஒருவன் அறியா தவனும் ஒருவன்**
**குணன் அடங்கக் குற்றம் உளானும் ஒருவன்**
**கணன் அடங்கக் கற்றானும் இல்.**

“எல்லாம் அறிந்தவனும் இல்லை. ஒன்றும் அறியாதவனும் இல்லை. ஆராய்ந்து பார்த்தால் குற்றம் இல்லாதவனும் இல்லை. அறியாமை இல்லாதவனும் இல்லை. குறைகள் எதுவுமில்லாதவன் கடவுள். குறைகள் உள்ளவன் தான் மனிதன். ஒவ்வொருவரிடமும் பலகுறைகள் இருக்கலாம். ஆனால் அக்குறைகள் மற்றவர்களைப் பாதிக்காமல் இருத்தல் வேண்டும். பொருள் இல்லாதவன் பொருளைக் கஷ்டப்பட்டு தேடுதல் வேண்டும். அறியாமை உள்ளவன் நல்ல நூல்களைக் கற்றல் வேண்டும். இப்படித் தம்முள் உள்ள குறைகளை நீக்கி நிறைவாக வாழ்கிறேன் என்று நினைப்பவனிடமும் மக்கள் பல குறைகளைக் காண்பர்.அதனால் தான் பெரியார்கள் எல்லாம் அறிந்தவனும் இல்லை. எதுவும் அறியாதவனும் இல்லை. கற்றாலும் அறியாமை இல்லாதவன் இல்லை என்றனர். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். பற்றுக்களற்று உலகைக் கடந்தவனாகிய கடவுள்கள் மீதும் குற்றங்கள் சுமத்துவாருண்டு. அதனால் குற்றங்களை நீக்கி நிறைவான செயல்களையே பெரியவர்கள் கவனத்தில் கொள்வர். பஞ்சமா பாதகங்களைத் தவிர்ந்த சிறு சிறு குற்றங்கள் என்னிடமும் இருக்கும், உன்னிடமும் இருக்கும்” என்றார் கதிரேசன்.

**105. மனைக்கு விளக்கம் மடவார் ; மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய**
**காதற் புதல்வருக்குக் கல்வியே கல்விக்கும்**
**ஓதிற் புகழ்சால் உணர்வு**

தில்லையம்பலம் பதில் கூறாது யோசித்தான். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார், “வீட்டுக்கு விளக்காக இருப்பவள் பெண். அப் பெண்களுக்கு மகிமையைக் கொடுப்பது அவளின் வளர்ப்பில் உருவான நன்மக்கள். நன்மக்களை மதிப்புறச் செய்வது நிறைவான கல்வி. கல்விக்குச் சிறப்பைக் கொடுப்பது மெய்யுணர்வு. அதாவது ஐயம்

திரிபுரக்கற்றல். இவை யாவும் வீட்டுக்கு ஒளியாகவுள்ள பெண்களிலேயே தங்கியுள்ளது. பொறுமை, அன்பு, தயவு, தாட்சன்யம் ஆகியன விலங்குகளையும் கவரும் என்பார்கள். ஆனால் இன்று மனிதன் விலங்குகளை விடக் கேவலமானவனாகி விட்டதால் அவற்றை உணர்ந்து கொள்கிறானில்லை. இருப்பினும் மெய்யுணர்வுடையோர் அவற்றைப்புரிய வைத்தல் வேண்டும். தாய் என்ற ஒளியில் தான் மக்களின் சிறப்புக்கள் தங்கியுள்ளன. ஆண்களிற் பலர் வன்முறையும் , பலாத்காரமும் கொடுமைகளும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவற்றைப் பிள்ளைகள் பின்பற்றாது ஒழுக்கமுள்ளவர்களாக வாழச் செய்வது தாய்மை. இப்பொழுது பிள்ளைகள் பேரம்பலத்தின் வளர்ப்பில் இருப்பதால் அவர்கள் செய்யக்கூடாதவற்றையெல்லாம் செய்கின்றனர். அது அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கச் செய்வதோடு சமூகத்திற்கும் தீமைகள் செய்யவைக்கும். இதை உணர்ந்து நீ உனது சகோதரியை அழைத்து வந்து பேரம்பலத்துடன் வாழவிடு. பெண் என்பவள் பொறுமையில் பூமாதேவியைப் போன்றவள். அதனால் அவள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வாள்.'' என்றார் கதிரேசன்.

**106. இன்சொலான் ஆகும் கிழமை; இனிப்பிலா**
**வன்கொலான் ஆகும் வசைமனம்;**
**மென்சொலின்**
**நாவினால் ஆகும் அருள்மனம்;**
**அம்மனத்தான்**
**வீ விலா வீடாய் விடும்.**

‘‘உண்மைதான் அண்ணை. தங்கச்சி வந்து தனக்கு நேர்ந்தவற்றைச் சொல்லி அழுத போது எனது மனம் கலங்கி விட்டது. ஒரே ஒரு பெண்பிள்ளை. நாங்கள் செல்லமாகத் தான் வளர்த்தோம். ஏராளமான சீதனம் கொடுத்துத் தான் திருமணம் செய்து வைத்தேன். நாம் கொடுத்த சொத்து அவளின் மூன்று பரம்பரைக்குப் போதும். அன்பு மிகுதியால் அவளைப் பிரித்து அழைத்துச் செல்வோம் என்றே நினைத்தோம். எனது பெற்றோரும் சகோதரர்களும் உறவினர்களும்

ஆத்திர மிகுதியால் பிரித்து விடுவது தான் நல்லதென்றனர். நானும் அந்த முடிவோடு தான் வந்தேன். இங்கே வந்த பின் உங்களது பேச்சைக் கேட்டபின்பு என்னால் அதைத் தட்டமுடியவில்லை. பெண்கள் கணவனுடன் இருப்பது தான் சிறப்பு. பெருமை. மங்கலம். அதனால் எனது முடிவைக் கைவிடுகிறேன். எனது பெற்றோரும் சகோதரர்களும் எனது முடிவை ஏற்பார்கள். இன்சொல்லால் நட்புரிமை உண்டாகும், மகிழ்ச்சி உண்டாகும். நிம்மதியும் பெருமையும் உண்டாகும். வாழ்வு சிறக்கும். வன்சொற்கள் வன்முறையைத் தோற்றுவித்துச் சீரழிவுகளைத் தரும். மென்மையான அதியான சொற்கள் அருளையும் செல்வத்தையும் என்றும் நீங்காத இன்பத்தையும் தரும். அருள் உள்ளவர்கள் தான் அழிவில்லாத வீட்டின்பத்தை அனுபவிப்பார்கள். நான் ஆத்திரத்தில் மதி கெட்டு மதிப்புக்குரிய உங்களுடன் தரக்குறைவாகக் கதைத்து விட்டேன். என்னை மன்னித்தருளுங்கள் என்று கலங்கினான் தில்லையம்பலம்.

“ என்னால் தானே இவையெல்லாம் நடைபெற்றன. கதிரேசண்ணையின் வார்த்தைகளைக் கேட்ட பின்பு தான் எனக்குப் புத்தி வந்தது. இனி மேல் நான் தீயவற்றைச் செய்யமாட்டேன். எனது மனைவியையும் பிள்ளைகளை கொடுமைப்படுத்த மாட்டேன்’’ என்று அழுதான் பேரம்பலம்.

‘‘நல்லவற்றைச் செய்தால் என்றும் நன்மையும் இன்பமும் கிடைக்கும். குடும்பத்தினரும் உறவினர்களும் சுற்றத்தினரும் சேர்ந்திருப்பர். எவ் வேளையிலும் மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும். மனதைத் திடப்படுத்திக் கொள். தவறுகள் நேராது’’ என்றார் கதிரேசன்.